CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

கைத்தறி

ஆசிரியர்: எம். கே. சாமி.

மாதப் பத்திரிகை — விலை 4 அணா

தறி 3	கோவை, 15—12—1951	பாவு 2

அடுத்த இதழ்

நேயர்களே!

அடுத்த (ஜனவரி) மாத "கைத்தறி" இதழ் அதிக பக்கங்களுடன் 4 அணா விலைக்கே பொங்கல் மலராக, வழக்கமான தொழில் துறை ஆராய்ச்சியாளர்களின் கருத்தோட்டம் நிறைந்த கதை, கவிதைகளுடன் வெளிவரும் என்பதை சந்தோஷத்தோடு அறிவிக்கிறோம்.

உங்களின் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டிடம் இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

—நிர்வாகி.



★

அகில இந்திய கைத்தறி நிரந்தரக் கமிட்டிக்கு

தமிழ் நாட்டின் பிரதிநிதியாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்

ஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார்,

பி. ஏ., பி. எல்.

★

மத்திய சர்க்காரால் அகில இந்திய கைத்தறி நிரந்தர கமிட்டி நிறுவப்பட்டபோது அதில் தமிழ் நாட்டிற்கு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி பல தடவைகள் "கைத்தறி" சர்க்காருக்கு நேரடியாக அக்கமிட்டியில் தமிழ் நாட்டிற்கும் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்று கடிதங்கள் எழுதி வந்தது. தலையங்கம் மூலமாக இதே கோரிக்கையை வற்புறுத்தி வந்ததையும் வாசகர்கள் அறிவார்கள்.

இன்று "கைத்தறி"யின் கோரிக்கை—தமிழ் நாட்டின் நெசவாளர் குரல்—ஏற்றுக் கொள்ளப்பட்டது. சென்னை கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தின் உபதலைவரும் ராஜ்ய, கைத்தறி கமிட்டி அங்கத்தினரும், கோவை ஜில்லா கைத்தறி போர்டின் தலைவருமான திரு. எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்களைத் தமிழ் நாட்டின் பிரதிநிதியாக அக்டோபர் 6-ம் தேதியன்று அகில இந்திய குடிசைத் தொழில் போர்டின், கைத்தறி நிரந்தரக் கமிட்டிக்கு மத்திய

நெசவாளர் கூட்டுறவு இயக்கத்தின் விரோதிகள்!

தமிழ் நாட்டின் கைத்தறி நெசவுத்தொழிலாளர்களின் சகல தலைமைச் சங்கங்களும், நெசவாளர்களை கூட்டுறவு இயக்கத்தினுள் கொண்டுவர வேண்டுமென ஒருமனதாக வற்புறுத்தி வருகின்றன. அதற்கான பல ஆலோசனைகளைக் கோரிக்கைகளாக்கி சர்க்கார் முன் வைத்து அதை நிறைவேற்றும்படி கோருகின்றன—வலியுறுத்துகின்றன.

இதற்கான இயக்கங்கள் கூட பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. நெசவாளர்களை ஒரு இயக்கத்தினுள் கொண்டு வந்து அவர்களுக்கு ஸ்தாபன ரீதியாக நன்மைகள் செய்யவும், அவர்களின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்துகொள்ளவும் இருப்பதற்குள் கூட்டுறவு இயக்கம் ஒன்றுதான் சிறந்ததோர் வழியென்பதை உணர்ந்துதான் மேற்படி ஸ்தாபனங்கள் சர்க்காரை வற்புறுத்திவருகின்றன என்பது சொல்லித்தெரியவேண்டியதல்ல. சர்க்காரும் இதை நன்கு உணர்ந்தேதான் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் ஏற்பட்டுவருவதை ஆதரித்து அம்முயற்சிக்கு ஊக்கமளித்துவருகின்றனர். பல இடங்களில் பங்கு மூலதனம்கூட நெசவாளர்களுக்கு சர்க்கார் தவணைக்கடனாகக் கொடுத்தும் இருக்கிறது. சுருக்கமாகச் சொல்வதெனில் நெசவாளர் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு சர்க்கார் நண்பனாகத் துணை நிற்கிறதென்று திட்டமாகச் சொல்லலாம்.

சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற எட்டாவது கூட்டுறவு மகாநாட்டை ஆரம்பித்துவைத்த பிரதமர் ராஜா அவர்கள், நெசவாளர் கூட்டுறவு இயக்க வளர்ச்சியை வெகுவாகப் புகழ்ந்து வரவேற்றிருப்பதோடு, கூட்டுறவு நெசவாளர்கள் தங்களின் தொழிலுக்குத் தேவையான நூலை கூட்டுறவு முறையிலேயே உற்பத்தி செய்து பூர்த்தி செய்துகொள்ள முன்வந்திருக்கும்—கூட்டுறவு நூல் மில் கட்டும் முயற்சியைப் பெரிதும் ஆதரித்துப் பேசியுள்ளார்.

அதே மகாநாட்டில் நெசவாளர்கள் அதிகமாக உள்ள வட்டாரங்களில் கட்டாயம் ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சங்காவது அமைக்கவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுமிருக்கிறது. ராஜ்ய கூட்டுறவு இலாகா தலைமை அதிகாரிகளும், மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர்களும், நல்லெண்ணம் கொண்ட ஜில்லா அதிகாரிகளில் பலரும் நெசவாளர்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள் அமைத்துக் கொடுப்பதில் அக்கறை எடுத்துக் கொண்டு வேலை செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி, சேலம், ராமநாதபுரம், மதுரை போன்ற ஜில்லாக்களிலும், மற்றும் பல பகுதிகளிலும் விறுவிறென்று நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிது புதிதாக சமீபத்தில் அமைக்கப்பட்டு ரிஜிஸ்ட்டர் செய்யப்படுகின்றன. சேலம்ஜில்லாவிலே சென்றமாதக் கடைசி வாரத்தில்கூட புதிதாக 6 நெசவாளர் சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நமக்கு செய்தி வந்திருக்கின்றது.

இம்மாதத்தில் மேலும் 6 சொஸைட்டிகள் ஆரம்பமாகும் என அச் செய்தியின் பின் பகுதி நமக்கு அறிவித்து நம்மை உற்சாகமூட்டுகின்றது. இதே நிலையில் போனால் வரும் ஆண்டுப் பூர்த்திக்குள் நம் மாகாணத்திலுள்ள 8 லட்சம் கைத்தறிகளும் கூட்டுறவு இயக்கத்தினுள் வந்துவிடும் என எண்ண இடமேற்படுகிறது.

நெசவாளர்களும், சர்க்காரும் சேர்ந்து விரும்பி வளர்த்துவரும் இவ்வியக்கத்தைப் பல இடங்களில் சில குட்டி அதிகார தேவதைகள் தடைசெய்ய முழுமுயற்சியும் செய்கின்றனர். சில இடங்களில் நல்ல முறையில் நடந்து வரும் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளுக்குள் புகுந்து குட்டிக் கலகங்கள், கட்சிப் பிரதி கட்சி சண்டைகள், அதிகார ஜபர்தஸ்து போன்ற வேண்டாத வேலைகளிலும் அந்த தேவதைகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படிப்பட்ட சில்லுண்டி வேலைகள் நடக்கக் காரணமாகவுள்ள அடிப்படைப் பிரச்னைகளைப்பற்றி அடுத்து ஒருசமயம் நாம் விவாதிக்கலாம். ஆனால் நாம் இக் கட்டுரையில் எப்படி நெசவாளர் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளில் "சிலர்" இடைஞ்சலாக இருக்கின்றனர் என்பதை மட்டும் ஆதாரத்துடன் இங்கு பார்க்கலாம்.

ஃ ஃ ஃ

கோயமுத்தூர் ஜில்லாவில் 80-க்கும் மேலாகவே நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகள்

இருக்கின்றன. இதன்னியில் நூற்றுக்கணக்கான கிராம நாணய சங்கங்கள், ஸ்டோர்கள், பாங்குகள், சேல்ஸ் சொஸைட்டிகள், மோட்டார், லாரி போக்குவரத்துகள் போன்றவைகளும் கூட்டுறவு இயக்கத்தினுள் இருப்பதால் இரண்டு டிப்டி ரிஜிஸ்திரார்கள் தலைமையில் — ஈரோட்டிலும், கோவையிலும் கூட்டுறவு இலாகாவை இரண்டாகப்பிரித்து வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் ஈரோட்டிற்கு சமீபத்தில் மாற்றலாகி வந்திருக்கும் டிப்டி ரிஜிஸ்திரார், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிதாகத் தோன்றுவதையோ, அல்லது இருக்கும் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளில் புதிதாகத் தறிகார மெம்பர்களை சேர்த்துக் கொள்வதிலோ ஊக்கம் காட்டாமல் அதற்கு ஊறு விளைவித்து வருகிறார் என்பதற்கு நம்மால் பல உதாரணங்களை காட்டமுடியும். அவர் கூட்டுறவு இயக்கத்தின் அதிகாரியாக இருப்பதை விட, அதை ஒழித்துக்கட்டும் பணிக்கு முதல்வராக இருக்கிறார் என்று கூட அவரின் உத்திரவுகளை வைத்துக் கொண்டே சொல்லலாம்.

உதாரணத்திற்கு இங்கு ஆதாரபூர்வமான ஒரு சம்பவத்தையே எடுத்துக்கொண்டு ஈரோடு டிப்டி ரிஜிஸ்திராரின் செயலைக் கவனிப்போம்.

ஈரோடு தாலூக்காவைச் சேர்ந்தது காஞ்சிக் கோவில் கிராமம். அங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் தங்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்துத் தரும்படி இலாகா அதிகாரிகளுக்கு 1950 ம் ஆண்டிலேயே விண்ணப்பித்துக் கொண்டிருந்தனர்.

அந்த விண்ணப்பத்தின் மீது, அங்கு ஒரு நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டி அமைத்துத் தரவேண்டுவது மிக அவசியம் தான் என்று உணர்ந்த டிப்டி ரிஜிஸ்திரார் அந்த காஞ்சிக் கோவில் கிராமத்திற்கு 3-5-51-ந் தேதி விஜயம் செய்து, கூட்டுறவு சங்கம் அமைக்க முதலில் ரூபாய் 5000 பங்குத் தொகை வசூல் செய்து கோவை — நீலகிரி கூட்டுறவு மத்திய பாங்கில் கட்டிவிடும்படி ஆலோசனை சொல்லிச் சென்றார்.

ஊரில் உள்ள நெசவாளர்கள் சரியாகப் 11 நாளைக்குள்ளாக ரூபாய் 5000 த்தையும் வசூல் செய்து 14-5-51-ந் தேதியன்று டிப்டி ரிஜிஸ்திராரின் யோசனைப்படியே மேற்படி பாங்கில் கட்டிவிட்டனர். அதாவது, "எள் என்பதற்குள் எண்ணெயாக" என்கிறார்களே அதுபோல காஞ்சிக் கோவில் நெசவாளர்கள் தங்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்துக் கொள்வதில் ஆர்வமும், அக்கரையும் காட்டியிருக்கிறார்கள்.

முறைப்படி நடக்கவேண்டிய சீர்வரிசைகளும் நடந்து முடிந்துவிட்டன. அதாவது மாகாண நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியாரும், கோவை — நீலகிரி கூட்டுறவு மத்திய பாங்காரும் காஞ்சிக் கோவிலில் ஒரு நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியை ரிஜிஸ்தர் செய்து கொடுத்துவிடலாம் என்று ஈரோடு டிப்டி ரிஜிஸ்திராருக்கு தங்களின் சம்மதத்தை அறிவித்து விட்டனர். இதே போல இன்னும் சில ஊர்களிலிருந்து நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகள் அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டுவந்திருந்த விண்ணப்பங்களும் சிபாரிசு செய்யப்பட்டன.

முடிவாக, ஈரோடு டிப்டி ரிஜிஸ்திரார் அந்த ஊரில் நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஒன்று அமைத்து, அதை ரிஜிஸ்ட்டர் செய்துதர வேண்டியதுதான் பாக்கி. இந்நிலையில் அந்த ஊரில் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியை ஏற்படுத்த நூல் நிலைமை சரியில்லையென விசித்திரமான காரணம் ஒன்றைச் சொல்லி, "நூல் நிலைமை திருப்திகாமானவுடன் தான் சங்க அமைப்பை யோசிக்கப்படும்" எனவும், பாங்கில் கட்டியுள்ள பங்குப் பணத்தை வேண்டுமானால் வாபஸ் பெற்றுக் கொள்ளலாமெனவும் டிப்டி ரிஜிஸ்திரார் தெரிவித்துள்ளார்.

ஏனைய இதர ஜில்லாக்களில் புதிய நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகள் ரிஜிஸ்ட்டர் செய்வதற்கு காட்டப்படாத அதிசயமான இக்காரணம், ஈரோடு டிப்டி ரிஜிஸ்திராருக்கு மட்டும் பட்டிருக்கிறது! நூல்நிலைமை திருப்திகரமாகவேண்டுமென்பதில் மாகாணத்திலுள்ள மற்ற எந்த டிப்டி ரிஜிஸ்ட்டாருக்கும் எட்டாத— கவனத்திற்கு வராத கவலை இவருக்குமட்டும் ஏற்பட்டிருக்கிறது.

டிப்டி ரிஜிஸ்ட்டாரின் இந்த அதிர்ச்சி தரும் உத்திரவைக் கண்ட காஞ்சிக் கோவில் நெசவாளர்கள் ஏமாற்றமடையவில்லை. மனம் சோர்ந்து உட்கார்ந்து விடவுமில்லை. அதற்குப் பதில் தாங்கள் கொண்ட லட்சியத்தில் வெற்றி காணத் திட்டமிட்டனர் கூட்டம் கூடி.

சரியாக 15 நாட்களுக்குள் கூட்டுறவு சொசைட்டி ரிஜிஸ்ட்டர் செய்து தராத போனால் ஈரோடு டிப்டி ரிஜிஸ்ட்டார் ஆபீஸ் முன் உண்ணா விரதம்

(6ம் பக்கம் பார்க்க)

"கைத்தறி"

சந்தா விகிதம்

ஆண்டு சந்தா ரூ. 3.
தனிப் பிரதி அணு நான்கு.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் நான்கு அணுவுக்கு தபால் ஸ்டாம்பு அனுப்பவும்.

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

'கைத்தறி'' காரியாலயம்,
முத்தண்ணன் குளம் வீதி,
கோவை.

விவரம் கூற மறுப்பதேன்?

"கிருமி"

இம் மாகாணத்தில் கைத்தறி நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களின் சகல ஸ்தாபனங்களும், கடந்த 7, 8 ஆண்டுகளாக, நம் ராஜபத்தில் உற்பத்தியாகும் நூலின் அளவு, நமக்கு மாதா மாதம் அகில இந்திய நூல் வினியோகத் திட்டத்தின் கீழ் கோட்டாவாகக் கிடைக்கும் பங்கு, கிடைத்ததை ஜில்லா வாரியாக ஒதுக்கப்பட்ட அளவு போன்ற விவரங்களை ராஜ்ய சர்க்கார் தனது கெஜட்டிலோ, அல்லது பத்திரிகைகளில் அறிக்கைகள் மூலமோ வெளிப்படுத்த வேண்டுமென்று கோரி வந்திருக்கின்றன.

இன்றும் அதே கோரிக்கையைப் பல மாநாடுகளில் தீர்மானங்கள் மூலம் கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்கள் வற்புறுத்தி வருகின்றன.

ஆனல், சர்க்கார் மட்டும் இதற்கு எள்ளளவும் செவிசாய்த்து மேற்கண்ட விவரங்களை வெளியிட்டதாக இன்றுவரை தெரியவில்லை. அதற்குப் பதில் ராஜ்ய கைத்தொழிலமைச்சர் அவர்கள் நமது மாகாணத்திற்கு வரும் மாதாந்திர நூல் கோட்டா எவ்வளவு என்பதை மட்டும் சமீப மாதங்கள் வரை அறிவித்து வந்தார். அதுவும் இந்த மூன்று மாதங்களாக அறிவிக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் என்ன என்றும் தெரியவில்லை.

சில சமயங்களில் மேற்கண்ட விவரங்கள் சட்டசபையில் அங்கம் வகிக்கும் எம். எ, எல். க்கள் சிலர் கேள்விகள் கேட்கும்போதுதான்—அதுவும் கேள்விக்குப் போதுமான நோட்டீஸ் கொடுத்து கேட்கப்படும் கேள்விகளுக்குத்தான் விவரமான பதில் கிடைக்கிறதே தவிர, சர்க்காராகவே முன்வந்து இவ்விவரங்களை மக்கள் அறியும் வண்ணம் அறிக்கைகள் மூலம் தெரிவிப்பதேயில்லை.

இந்த விவரங்களை, இந்தத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டுவது சர்க்காருக்கு வீணை தொந்திரவு கொடுத்து வேலையை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல. அதற்குப் பதில் நூல் நெருக்கடிக்காக சர்க்கார் தரப்பில் கூறப்படும் காரணங்கள் உண்மைதானு என்பதை புத்தி பூர்வமாக உணர்ந்துகொள்ளத்தான் மேற்கண்ட விவரங்கள் கோரப்படுகிறது.

முதலாவதாக, நூல் உற்பத்தியைப் பற்றிய கணக்கே ஒரு பெரிய சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருக்கிறது எனப் பலரும் உணர்கிறர்கள். தென்னிந்தியாவில் உள்ள பஞ்சாலைகளில் 45 லிருந்து 48 ஆயிரம் பேல்கள் வரை தான் நூல் உற்பத்தியாவதாக மில் முதலாளிகளும் மத்திய டெக்ஸ்டைல் இலாகாவினரும் அறிவிக்கின்றனர்.

இந்த 48 ஆயிரம் பேல்களிலிருந்துதான் நம் ராஜ்யத்திற்கு 15 லிருந்து 17 ஆயிரம் பேல்கள் வரை சராசரியாக அகில இந்திய நூல் வினியோக திட்டத்தின் கீழ் மாதா மாதம் ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

நம் மாகாணத்தின் நூல் தேவை சர்க்கார் கணக்குப்படி 30 ஆயிரம் பேல்கள் என்றும், நெசவாளர்களின் ஸ்தாபனங்களுடைய கணக்குப்படி 39 ஆயிரம் பேல்கள் தேவைப்படுகிறது என்றும் பொதுவாக அறிவிக்கப்படுகிறது. இந்தக் கணக்குகளின் அடிப்படையிலேயே முறையே ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரையும், நெசவாளர் ஸ்தாபனங்கள் ராஜ்ய சர்க்காரையும் வற்புறுத்தி வருகின்றன.

ஒரு பக்கம் தேவைக்குப் போதாத நூல் டெக்ஸ்டைல் கண்ட்ரோல் உத்திரவின் கீழ், இன்பார்மல் நூல் பங்கீட்டுத் திட்டத்தின் பேரால் மாகாண நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற அதே காலத்தில், கள்ளச்சந்தையில், அதிகமான விலைக்கு எவ்வளவு பேல் நூல் எந்த நெம்பரில்வேண்டுமானுலும் கிடைக்கிறது என்ற அனுபவமும்தான் சர்க்காரை மேற்கண்ட விவரங்களை எல்லோரும் அறிய வெளியிடும் படி வற்புறுத்த சம்பந்தப்பட்டவாகளைத் தூண்டுகிறது.

பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்களின் நிர்வாகத்தோடு சம்பந்தப்பட்டுள்ள பல தலைவர்கள் தென் இந்தியமில்களில் 60 ஆயிரம் பேல்களுக்கும் அதிகமாகவே நூல் உற்பத்தியாகிறது என பகிரங்கமாக அறிவிக்கின்றனர். இந்தக் கணக்குக்கு ஆதாரமொன்றுமிருக்க முடியாது எனயாரும் சுலபத்தில் சொல்லிவிட முடியாது. காரணம்; அந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் நூல் உற்பத்தியில் நேரடியாக ஈடுபட்டுள்ளதால்தான்.

யதார்த்தமாகவே பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்கள்-அதன் தலைவர்கள் கூறும் கணக்குப்பொய்யாக இருக்குமானல், ஏன் சர்க்காரும், மில் முதலாளிகளும் அவர்கள் வாதத்தை மறுத்து விவரங்களோடு அறிக்கைகள் வெளியிட்டிருக்கக்கூடாது என நாம் கேட்கிறேம்.

ஒரு நூற்புக் கதிர் தினசரி 16 மணி நேரம்—இரண்டு ஷிப்டில் வேலை செய்தால் இத்தனை அவுன்சு, அல்லது பவுண்டு நூல்

இன்ன நெம்பரில் உற்பத்தி செய்யமுடியும் என்கின்ற கணக்கை ஆதாரமாகக்கொண்டு, மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாலையிலும் உள்ள மொத்த நூற்புக் கதிர்களில்-- ஸ்டேபிள் பைபர் நூல் உற்பத்திக்கு சட்டபூர்வமாக ஒதுக்கப்பட்டுள்ள கதிர்கள் போக-மொத்தம் இவ்வளவு பேல் நூல் உற்பத்தியாகிறது என ஏன் பகிரங்கமாகவெளியிடக்கூடாது.

இந்த மூடி மறைக்கும் ஒரு ஏற்பாட்டிலிருந்தே இதில் ஏதோ ஒரு பெரிய மர்மம் உள்ளடங்கி யிருக்கிறது என்பதும், அதை வெளியில் சொல்லுவதால் நெசவாளர் உலகில் ஒரு பெரிய கிளர்ச்சிக்கு அந்த விவரங்கள் அடிப்படையாக அமைந்துவிடுமென்பதும்தானே, விவரங்களை வெளியிட முடியாமல் இருப்பதற்கு உரிய காரணங்களாக இருக்க முடியும் என ஊகிக்கவேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக எடுத்துக் கொண்டால் நம் மாகாணத்திற்குவரும் நூல் பேல்களை ஜில்லா வாரியாக ஒதுக்குவதில் ஏதோ கோளாறு இருப்பதாகவும் நெசவாளர் ஸ்தாபனங்கள் சந்தேகிக்கின்றன.

உதாரணமாக இம்மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் 16 ஆயிரம் பேல்களை ஒழுங்காக வினியோகம் செய்வதென்றால் தறி ஒன்றுக்கு 7½ ராத்தல் நூல் சராசரியாக சகல நெம்பர்களிலும் கொடுக்க முடியும் என பல ஸ்தாபனங்களும் (தென் இந்திய மில் முதலாளிகள் சங்கம் உள்பட) புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டி வருகின்றன.

இந்தக் கணக்கையும் சர்க்கார் இன்றுவரை தப்பு என்று சொல்லிவிடவில்லை. அதே காலத்தில் ஜில்லா வாரியாக ராஜ்ய சர்க்கார் ஒதுக்கும் பேல்களையும் அறிவிப்பதுமில்லை.

ராமநாதபுரம் ஜில்லாவில் தறி ஒன்றுக்கு 6, 7. ராத்தல் நூலும், சேலம் ஜில்லாவில் 6 லிருந்து 10 ராத்தல் நூலும், கொடுக்கப்படுகிறது. அதே காலத்தில் கோவை ஜில்லா ஈரோடு தாலூக்காவில் 2 ராத்தல் வரைதான் நூல் சொடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஜில்லா அதிகாரிகளல்ல என்பதும், இருக்கும் வினியோக ஏற்பாடும், அதற்காக வகுக்கப்பட்டுள்ள கொள்கையுமேதான் காரணமென்பதும் பலரும் அறிவர்.

தவிர, சன்சியூமர் கோட்டதாரர்களின் தறிகளுக்கு 20 ராத்தல் வரை நூல் கொடுக்கப்டடுகிறது. கூட்டுறவுநெசவாளர் சங்கங்களுக்கும் 20 சதமான அளவுவெளித் தறிகளைவிட அதிகமாக நூல் கொடுக்கப்படுகிறது. இப்படி விசேஷமான பாரபட்சமான நூல் வினியோக முறையும்கூட இன்றைய நூல் நெருக்கடிக்குக் காரணங்களாகக் காட்டப்படுகின்றன.

எனவே, வினியோக முறையை சீர்படுத்தும் நோக்கத்தின் மூலம்-அல்லது அதற்காக சர்க்காரை வற்புறுத்தி பலன் காணுவதின் மூலம் இருக்கும் நூலையாவது எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளலாமல்லவா என்ற நோக்கத்துடனும் பல ஸ்தாபனங்கள் மேற்கண்ட விவரங்களை ஏன் வெளியிடக்கூடாதென சர்க்காரைப் பார்த்துக் கேட்கின்றன.

நூல் உற்பத்தி, அதை வினியோகிக்கும் முறை ஆகிய இந்த இரண்டு அடிப்படை அம்சங்களிலும் நடைபெற்று வருகிற கோளாறுகள் தவிர்க்கப்பட-நெசவாளர்கள் தங்களின் திட்டவட்டமான கோரிக்கைகளை தெளிவோடு எடுத்துக் காட்டி அணுக-இருக்கும் நெருக்கடியை எப்படி சமாளிக்க முடியும் என்பதை இருதரப்பாரும் நல்ல முறையில் யோசனை செய்து தீர்க்கமான முடிவுக்குவர மேற்கண்ட விவரங்கள் வெளியிடப்பட வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

இருப்பினும், கடந்த 7 வருடகாலமாகவே இக் கோரிக்கையை அன்றிருந்த அட்வைசரி சர்க்காரும் சரி, இன்றுள்ள காங்கிரஸ் சர்க்காரும் சரி ஏன் ஒப்புக்கொண்டு விவரங்களை வெளியிட மறுக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை.

இந்தப் பிரச்னையின்மீது நாம் சென்ற ஆண்டிலேயே அன்று கட்டுப்பாடு சாமான்களின் டைரக்டராக இருந்த ஸ்ரீ சிவராமன் ஐ. சி. எஸ். அவர்களிடம் விவாதிததோம். அவர் நமது வாதத்தை ஒப்புக்கொண்டு மாதா மாதம் சர்க்காரின் பத்திரிகையான "சென்னைச் செய்தி" யில் இவ் விவரங்களை வெளியிடுவதாகவும், "கைத்தறி" க்கும் அவ் விவரங்களின் நகல் ஒன்று அனுப்பிவைப்பதாகவும் வாக்களித்தார்.

எக் காரணத்தாலோ அவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. அதன் பின் வந்த காலஞ் சென்ற ஸ்ரீ பி. எஸ். விஸ்வநாதய்யர் ஐ. சி. எஸ். அவர்களும் கூட இந்தப் பிரச்னையை ஒப்புக்சொண்டு விவரங்கள் அனுப்புவதாக உறுதி தந்தார். ஆனால் அவரும் நிறைவேற்றவில்லை.

இந்தப்பிரச்னையின்மீது சேலம் குகை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்கம் தனது மகாசபைக் கூட்டத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. அதில்; சர்க்கார் தகவல்கள் வெளியிடாமலிருப்பது கைத்தறி ஜவுளித் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு மிகவும் அசௌகரியகாக இருக்கிறது" என அக்கோரிக்கையை வற்புறுத்தியிருக்கிறது.

இது போன்று பல ஸ்தாபனங்கள் மாகாணத்தில் தினசரி தகவல் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் சர்க்கார் மட்டும் இது விஷயத்தில் கொஞ்சமும் மசியாமல் இருந்து வருகின்றனர்.

ஒரு தடவை இவ்விஷயத்தை தொழில் மந்திரி ஸ்ரீ பெருமாள் சாமி ரெட்டியாரிடம் கேட்டபோது அவர், நூல் வினியோக விபரங்களை அந்தந்த ஜில்லாக் கலெக்டர்களிடம் கேட்டுத்தெரிந்துகொள்ள வேண்டுமெனபதில் கூறினாராம். இந்தப்பதில் உண்மையிலேயே விவரம் கோரியவர்களுக்கு வருத்தத்தை நிச்சயம் அளித்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வாக்களிக்கும் ஒரு சர்க்காரில் இவ்விஷயம் மூடி மறைக்கப்பார்ப்பதை எவருமே ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இந்தத் தகவலை ராஜ்ய சர்க்கார் வெளியிடுவதால் நன்மையேதவிர கெடுதல் ஒன்றுமில்லையென கடைசியாக எடுத்துக்காட்டுகிறோம். மேற்கொண்டாவது மாகாண சர்க்கார் கைத்தறித்தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்கு தெரிந்துகொள்ளும் வகையில் நூல் அலாட்மெண்ட் விவரங்களை ஜில்லா வாரியாக வெளியிட முன்வர வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

○

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

இருப்பதென முடிவு செய்தனர். அம் முடிவை சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளுக்கும் அறிவித்தனர்.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக மாறிவிட்டதைக் கண்ட டிப்டி ரிஜிஸ்ட்டார், உடனே தன் உத்திரவுக்குவேறு உருவம் கொடுக்க முன் வந்தார். காஞ்சிக்கோவிலை யடுத்து 6மைல் விஸ்தீரணங்களில் இருக்கும் கவுந்தப்பாடி, நசியனூர், சித்தோடு ஆகிய ஊர்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் வேண்டுமானால் காஞ்சிக்கோவில் நெசவாளர்கள் மெம்பர்களாகச் சேர்ந்து கொள்ளலாமென்பதே அந்தப் புதிய உத்திரவில் கண்டுள்ள மாற்றம்.

இந்த அரிய ஆலோசனையை காஞ்சிகோவில் நெசவாளர்களுக்குக் கூறுமுன், தனது உத்திரவே முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே என்பதைக்கூட எண்ணிப் பார்க்க இவரால் முடியவில்லை போலும்.

புதிய கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிப்பதற்கு நூல் நிலைமை திருப்திகரமாக இல்லையெனச் சொல்லும் டிப்டிரிஜிஸ்ட்டார், வேறு சொஸைட்டிகளில் அவர்களைப் போய்சேர்ந்துகொள்ளும்படி ஆலோசனை சொல்லுவதன் மூலம் எப்படி அவ்வளவு சீக்கிரமாக நூல் நிலைமையில் திருப்திகரமேற்பட்டுவிட்டதாக அறிந்துகொண்டாரோ தெரியவில்லை.

இந்த முரணான உத்திரவை காஞ்சிக்கோவில் நெசவாளர்களுக்கு அனுப்பும்போதே-பக்கத்து ஊர்களில் போய் அங்குள்ளநெசவாளர் கூட்டுறவு சொசைட்டிகளில் மெம்பர்களாகச் சேர்ந்துகொள்ளலாம் என ஆலோசனை கூறும்போதே-இதே டிப்டிரிஜிஸ்ட்டார் தனது நிர்வாகத்துக்குட்பட்ட சகலநெசவாளர்கூட்டுறவு சொஸைட்டிகளுக்கும் புதிதாக தறிகார மெம்பர்கள் எவரையும் சேர்த்துக்கொள்ளக் கூடாதென அதற்கு முன் ஒரு தேதியில் உத்திரவும் போட்டு அனுப்பித்துள்ளார்.

ஒன்றுக்கு ஒன்று சம்பந்தமில்லாமல் உத்திரவுகள் போட்டு ஏழை நெசவாளர்களை அலக்கழிக்கும் இவரின் இப்படிப்பட்ட ஏற்பாடுகளை யாருமே புரிந்துகொள்வது என்பதுகஷ்டம்தான். ஏனெனில்; உத்திரவு போடுபவருக்கே அது புரிவதில்லை. அவருக்குப் புரிந்தாலல்லவா மற்றவர்களுக்குப் புரிய.

சர்க்காரின் நோக்கம் நடைமுறையில் தடைப்படுத்தப்படுகிறது ஈரோடு டிப்டி ரிஜிஸ்திரார் அவர்களால் நெசவாளர் கூட்டுறவுஇயக்க வளர்ச்சிசம்பந்தப்பட்டவரை என்பது மேற்கண்ட ஆதாரபூர்வமானசம்பவமேநிரூபிக்கிறது.

கூட்டுறவு இயக்கத்தின்மூலம் நன்மை காணத் துடிதுடிக்கும் ஏழைக் கைத்தறியாளர்களுக்கு, துணை நிற்கவேண்டிய இவர்மேற்கொண்டாவது தனது நடைமுறையை மாற்றிக்கொண்டு நெசவாளர்களுக்கு அவர்காலத்தில் நன்மைகள் செய்ய முற்படவேண்டுமென நாம் ஆசைப்படுகிறோம்.

மாகாண சர்க்காரும், கூட்டுறவு இயக்கத் தலைமை அதிகாரியான ரிஜிஸ்ட்டார் அவர்களும் இவ்விஷயத்தில் தலையிட்டு காஞ்சிக்கோவில் கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயம் வழங்கநடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருகிறோம். அதே காலத்தில் ராஜ்யத்தில் நெசவாளர் கூட்டுறவுசங்கங்களைசாத்தியமான சகல இடங்களிலும் அமைத்து நெசவாளர்களுக்குநல்வாழ்வளிக்க திட்டமான நடைமுறைகளை மேற்கொள்ளும்படி ஜில்லா அதிகாரிகளுக்கு தாக்கீது விட வேண்டுமென்றும் நாம் ராஜ்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறோம்.

—எம். கே. சாமி.

பொள்ளாச்சி சட்டசபைத் தொகுதி
கைத்தறி நெசவாள வாக்காளர்களுக்கு
ஓர் வேண்டுகோள்.



பேரன்புடையீர் !

நம் நாடு தொழில் வளர்ச்சியிலே வெகு வேகமாக முன்னேறிவரும் இந்நாளில்கூட, குடிசைத் தொழிலாக கைத்தறி நெசவுத்தொழில இருந்தும் அழிக்க முடியாது வளர்ந்து வருவதற்கு காங்கிரஸின் பெருமுயற்சியேயாகும். வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் அன்று, கைத்தறியாளர்களின கலையம்சம் துள்ளும் கரங்களின் விரல்களைத் துண்டித்தது. தொழிலை அழித்துவிட திட்டம் தீட்டியது. காந்திஜி சகாப்தத்தில்தான் அந்நிய நாட்டுத் துணி பகிஷ்கார இயக்கத்தின் மூலம் உள்நாட்டு கைத்தறி ஆடைகளுக்கு புதிய மோகம் நம் மக்கள் உள்ளத்திலே உண்டாகும்படி செய்யப்பட்டது.

காங்கிரஸ் மகாசபையும், அதன் வீரமிக்க விடுதலை ஆர்வம்கொண்ட தொண்டர்கள், தலைவர்களும் அந்நிய நாட்டுத் துணிப் பகிஷ்காரத்திற்காகவும், கைநெசவுத் தொழில் முன்னேற்றத்திற்காகவும் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் மறியல்செய்து சிறைக்கூடமேகினர். அந்த தியாக தீப்பிழம்பில் வெள்ளையனின் திட்டம் சாம்பலாக்கப்பட்டது. மில்துணியை அணிந்துகொண்டுசிலர் இன்று கைத்தறிக்காரர்களுக்குத் தாங்கள் ஏதோ பிரமாதமாகச் செய்து விடுவோம் என வெட்கமில்லாமல் கூறுகின்றனர். இவர்கள் சுதேசி இயக்கத்தின்போது கைத்தறி ஆடைகளை அணியவே அஞ்சினர். தேர்தல் நெருங்கிவிட்ட இன்று, உங்கள்மத்தியில் அவர்கள் தோன்றிகைத்தறியாளர்களுக்கு காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லையென்று கூறுகின்றனர்.

கைத்தறியாளர்களின் வீடுகளில் சதாசுழலும் ராட்டையை தனது கொடியிலே பொறித்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ், உங்களுக்கு ஒன்றுமே செய்யவில்லையா? சிந்தியுங்கள். குறுதி சிந்தி உறுதியாக நின்று உங்கள் தொழிலைக் காப்பாற்றியவர்கள் யாரென்று.

இடைக் காலத்தில் இயற்கையாக ஏற்பட்ட மழை இல்லாமை உணவு உற்பத்தியையும், பருத்தி உற்பத்தியையும் பாதித்துவிட்டதாலேயேதான் நூல் நெருக்கடியேற்பட்டது. ஒரு இழைநூல்கூட ஏற்றுமதி செய்யக்கூடாது என இந்நாட்டின் கைத்தறி நெசவாளர்கள்பால் உண்மை அன்புகொண்ட காங்கிரஸ் சர்க்கார் தடைவிதித்துள்ளதை எதிரிகள் உங்களிடம் சொல்லமாட்டார்கள். போதுமான நூல் உங்களுக்குக் கிடைக்க காங்கிரஸ் உத்திரவாத மளித்துள்ளதை நீங்கள் மறக்காதீர்கள்.

நான் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் பொள்ளாச்சித் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கிறேன். நான் சட்டசபைக்குச்சென்று இத்தொகுதி கைத்தறி நெசவாளர்களின் தொழிலுக்குப்போதுமான நூல் கிடைக்க—காங்கிரஸ் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்ற முழு முயற்சியும் இடைவிடாது செய்வேன்,

அதே காலத்தில் நவீன கால மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், இயந்திரத் தொழில் போட்டியில் கைத்தறி நெசவுத்தொழில் அழிந்து போகாமல் பாதுகாக்க நவீன முறைகளைக் கைத்தறித் தொழிலில் புகுத்தி அதை வளர்க்கவும் உங்களின் பொதுவான தொழில் பிரச்னைகளைத் தீர்க்கவும் நான் சேவை செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

நீங்கள் அனைவரும், உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களும்இத்தேர்தலில் **நுகந் தாங்கிய இரண்டு காளைகளின்** சின்னம் போடப்பட்ட பெட்டியில், உங்களது தொழிலின் எதிர்காலத் தலைவிதியை நிர்ணயிக்கும் ஓட்டுகளைப் போட்டு என்னை ஆதரிக்கவேண்டுமாய் கோருகிறேன்.

உங்களின் அன்புள்ள,

நா. மகாலிங்கம்.

நூல், துணி ஆகியவைகளுக்கு விலை, வினியோகக் கட்டுப்பாடுகள் கூடாதெனப்பலர் வாதிக்கின்றனர். அதில் இக்கட்டுரை கட்டுப்பாடுகளை ஆதரிக்கின்றது. அதே காலத்தில சீர்படுத்தி, முறையாக நடத்த முக்கூட்டுக் கமிட்டிகள் அமைக்கப்படவேண்டுமென கோஷிக்கிறது. கட்டுப்பாடுகள் கூடாதென்போர்: இக்கட்டுரைக்கு மறுப்பு எழுதலாம். அதை நாம் பிரசுரிக்க தயாராக இருக்கிறோம்.—ஆசிரியர்.

விலை, வினியோகக் கட்டுப்பாடுகள் அவசியமா?

நூல், துணி ஆகியவைகளுக்குள்ள விலை, வினியோகக் கட்டுப்பாடுகள் யாவும்நீக்கிவிடவேண்டுமென ராஜ்யத்திலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலில் சம்பந்தப்பட்ட பலர்கருதுகின்றனர். இக்கருத்தைப் பல ஸ்தாபனங்களும் பிரதிபலிக்கின்றன.

விலை, வினியோகக் கட்டுப்பாடுகள் அமலில் இருப்பதால்தான், நூல் நெசவாளர்களின் தொழில் தேவைக்குப் போதுமான அளவுகளில் கிடைப்பதில்லையென்றும், கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுவிட்டால் நிச்சயம்தேவையான அளவு நூல் கிடைக்குமென்றும், கள்ள சந்தை வர்த்தகமும் தொலையுமென்றும் கட்டுப்பாடுகள்கூடாது என்று சொல்வோர் வாதிக்கின்றனர்.

இக்கருத்து பற்றி மாகாணத்தில் இரண்டுவிதமான அபிப்ராயங்கள் இருந்துவருகிறது. காங்கிரஸ் ஸ்தாபனம்கட்டுப்பாடுகள் அவசியமென கொள்கையளவில் தீர்மானம் நிறைவேற்றியிருந்தாலும், அந்த ஸ்தாபனத்தைச்சேர்ந்த பலர் அதற்கு விரோதமாகவே நடைமுறையில் பேசுகின்றனர். ஏதோ ஜவஹர்லால் கூறுகிறாரே என்பதற்காகவே அவர்கள் ஆதரிப்பதாக கூறுகிறார்கள்.

விலை, வினியோகக்கட்டுப்பாடுகளை ஒழித்துக்கட்டுவதுதான் தனது கட்சியின் லட்சியமென்றும், மகாத்மாஜீஉயிரோடுஇருந்திருந்தால் நிச்சயம் ஜவஹருக்கு எதிராக தனது கருத்தை வெளியிட்டிருப்பாரென்றும், ஆகவே காந்திஜீ விட்டுச்சென்ற பணியையே தாங்கள் மேற்கொண்டிருப்பதாகவும் ஸ்ரீ கிருபாளினியும் அவரது பிரஜா கட்சியும் கூறுகின்றது.

கம்யூனிஸ்ட், சோஷியலிஸ்ட் கட்சிகள், விலை வினியோகக்கட்டுப்பாட்டை ஆதரிக்கிறதெனினும், இன்றுள்ளகட்டுப்பாடுகளை திறமையாக நிர்வகிக்கஆட்சியிலுள்ள காங்கிரஸ் கட்சியால் முடியாது. அதற்குப் பதில் மக்களாட்சி ஏற்பட்டால்தான் சாத்தியம் என்று கூறுகின்றனர்.

இவைகள் அனைத்துமே நாட்டின் அரசியலில் ஆர்வம்கொண்டுள்ள அரசியல் கட்சிகளின்அபிப்பிராயமாக இருந்தாலும், இந்த வாதங்களைச் சுற்றித்தான் இதர தொழில் ஸ்தாபனங்களும் தங்களுடைய கொள்கையை வரையறுக்கின்றனர் என்பது தெளிவு. வியாபாரிகளாய் இருப்பவர்கள் இன்றைக்குள்ள கட்டுப்பாடுகளால் தங்களுடைய கரங்கள் கட்டுண்டுவிட்டதாகவும், சுதந்திரமாய் வர்த்தகம் - அவரவர்களின் திறமைக் கேற்ப செய்ய முடியாமல் போய்விட்டதென்றும் சாதாரண அதிகாரிகளின் பியூன்களுக்கெல்லாம் கூட 'சலாம்' செய்ய வேண்டிய அளவுக்கு வர்த்தகர்களின் சுய கவுரவம் பாதிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறுகிறார்கள்.

அனுபவித்து-அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அதிருப்தியையே வர்த்தகர்கள் மேற்சண்ட வார்த்தைகளாகக் கொட்டுகின்றனர் என்பதை யாரும் ஒப்புக்கொள்வர்.

யதார்த்தமான நடைமுறைகள் இன்று கட்டுப்பாடுகள் மீது கசப்பை மக்கள் உள்ளத்தில் வளர்த்து வருகிறது என்னமோ உண்மைதான். நாற்றம் வீசும் அரிசுக்குக்கூட கட்டுப்பாடுதான்காரணம். வீட்டுவாடகை உயர்வுக்கும் அதற்கென ஓர் சட்டமும், கட்டுப்பாடுகளும் இருப்பதேகாரணம். எந்த நெருக்கடிக்கும் கட்டுப்பாடுகளேதான் காரணம். ஆகவே அவைகள் அனைத்தும்தொலைந்துவிட்டால்நிலைமை சீர்திருந்திவிடும் என்ற எண்ணம் இன்று மக்கள் உள்ளத்தில் வளர்ந்துவருவதை நாம் பார்க்கிறோம்.

இந்தமாதிரிக் கூறுவதில் உண்மையிருக்கிறதா? இப்படிப்பட்ட எண்ணத்தால் லாபம் அடைபவர்கள் யார்? என்பதை நாம் பார்த்துவிட்டால் கட்டுப்பாடுகளால் நன்மையா, தீமையா என்பதுபுலனாகிவிடும்.

நாம் இங்கு நூல்விலை, வினியோகக் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டு ஆராய்வோம்.

நூலுக்கு சர்வதேச பஞ்சு மார்க்கெட்டில் நாம்பெறுகிறபஞ்சின் விலையைக்கொண்டும், உள்நாட்டில்நிர்ணயிக்கப்பட்டுள்ளபஞ்சு விலைக் கட்டுப்பாட்டை அடிப்படையாகக் கொண்டும் நூலுக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது.

விலை எப்போதும் ஒரே மாதிரியாக இல்லாமல் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாக அவ்வப்போதுள்ள பஞ்சு விலை, பஞ்சாலைத் தொழிலாளர்களின் கூலி ஆகிய இவைகளைக் கொண்டே திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. நாம் நமது அனுபவத்திலேயே இதை நன்கு பார்க்கிறோம்.

அப்படி நிர்ணயிக்கப்படும் நூல் விலை உண்மையிலேயே அவைகளை வாங்கி உபயோகிக்கும் பொது மக்களின் வாங்கும் சக்தியைமனதில் கொள்ளாமலேயே நிர்ணயிக்கப்படுவதால், பல இடங்களில் இன்று துணி தேக்க மேற்பட்டிருப்பதை நாம்பாக்கிறோம் அதே போல வாங்கி நெய்தாலும் கூலி கிடைப்பதில்லை யென்கிற காரணத்தால் பலஇடங்களில் நூலும் தேக்க ஆரம்பித்திருக்கிறது.

ஆகவே விலை, வினியோகக்கட்டுப்பாடுகள், இதபோன்ற ஒரு சங்கடத்தை யேற்படுத்துகிறதுடன் உற்பத்தியாகும் துணியும் நூலும் ஒழுங்கான வினியோகத் திட்டத்தின்படி வினியோகிக்கப்படாத காரணத்தால்தேவையில்லாத இடங்களுக்கு இன்னொரு இடத்திற்குத் தேவையான நூல் போய்விடவும், அது அங்கு விற்காமல் வேறு வழிகளில் அதை விற்கப்படவும் தேவையுள்ள இடத்தில் அப்பொருள் கிடைக்காத நெருக்கடி ஏற்பட்டு, தவறான வழியில் தேவையைப்பெற முயற்சிக்கவேண்டியும் ஏற்படுகிறது.

இதில் ஏற்படுகிற நடைமுறை சங்கடங்கள் மக்கள் உள்ளத்தில் கட்டுப்பாடுகளுக்கு எதிரான எண்ணத்தை உண்டாக்கி வளர்க்கச் செய்கின்றன.

எந்த சர்க்கார் கட்டுப்பாடுகள் அவசியமென எண்ணுகிறதோ - அதற்கான சட்டதிட்டங்களையும், இலாக்காக்களையும் சிருஷ்டிக்கின்றதோ, அதே சர்க்கார் நடைமுறையில் தங்களுடைய நோக்கத்தையும், சட்டதிட்டங்களையும் உடைக்கின்றனர் என்பது யதார்த்த உண்மையாகிவிட்டது.

இதற்குக் காரணம்; முறையான வினியோகம் மட்டும் இல்லாதது அல்ல. உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், தேவைக்கேற்ப திட்டமிட்டு அதைச்செய்யவும், உற்பத்தியானதை வேறு வழிகளில் செல்லாமல் பார்த்துக் கொள்ளவுமான வழிமுறைகளை சர்க்கார் மேற்கொள்ளாமல் இருப்பதுதான் கட்டுப்பாடுகள் மீது மக்களின் மனதில் கசப்பை வளர்த்திருக்கிறது.

ஒவ்வொரு பஞ்சாலையிலும், தொழிலாளி, முதலாளி, சர்க்கார் பிரதிநிதி ஆகிய மூன்று பிரிவினரின் பிரதிநிதி இருந்து, அன்றாட உற்பத்தியை எடை போட்டுக்கணக்கிட்டு அக்கணக்கின்படி வருகிற பொருளை சர்க்கார் கட்டாயமாகக் கொள்முதல் செய்து, தேவையான இடங்களுக்கு, போதுமான அளவு துணியும், நூலும் அனுப்பி நெசவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் எவ்விதமான இடைஞ்சலுமின்றி முறையாக நூலையும், துணியையும் வினியோகம் செய்தால் இப்பொருள்களின் நெருக்கடியை சுலபமாக சமாளித்து, மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்துவிட முடியும்.

இப்படிச்செய்வதுதான் விலை, வினியோகக் கட்டுப்பாடுகளை திறமையாக நடத்த உதவியாக இருக்கும். மேலும், மக்களுக்கோ, தொழில் முதலாளிகளுக்கோ, சர்க்காருக்கோ எவ்வித இடைஞ்சலோ, தொந்திரவோ இல்லாமலேயே இப் பிரச்னையை வெற்றிகரமாக சமாளிக்கவும் முடியும்.

அப்படியில்லாது, வெறும் விலை, வினியோகச் சட்டுப்பாடுகளை மட்டும் வைத்துக்கொண்டு நூல், துணிப் பிரச்னையை சமாளித்துவிட முடியும் என்று உற்பத்தியைப் பற்றிக் கவலை கொள்ளாமல் எண்ணுவது பேதமையாகும். மக்களின் தேவைகளோடு-நெருக்கடிகளோடு எள்ளி நகையாடுவது போலாகும்.

இந்த ஆலோசனை, மில் முதலாளிகளின் தொழில் சுதந்திரத்தைப் பறிப்பதாக இல்லையா என கேட்கலாம். இந்த கேள்விக்கு சரியான நியாய அடிப்படை இருக்க முடியாது. ஏனெனில் நாம் சுதந்திரமாக நாட்டில் நடமாட முடிகிறதென்பதற்காக, யாரை வேண்டுமானாலும் கொலை செய்துவிடமுடியுமா? முடியாது. அதுபோலத்தான் இதுவும்.

பஞ்சாலைத் தொழில் என்பது ஏதோ சில மூலதனக்காரர்களின் கொள்ளையடிக்கும் ஒரு கேடயமல்ல. அது தேச மக்களின் தேவையின் மீது பிறந்தது. ஆகவே மக்களின் அன்றாடத்

(17-ம் பக்கம் பார்க்க)

அவனாசி கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட். No. K. 1229.

அவனாசி P. O. :: (திருப்பூர் R. S)

எங்கள் சங்கத்தில் 20, 26, 40, 60 80, நெ. நூல்களில் கெட்டிச் சாய ஜரிகை & பட்டு பேட்டு, சேலைகள், கலர் ஷர்ட்டிங்குகள், வேஷ்டி. துண்டு, காடா பீஸ் ரகங்கள் எல்லாம் நல்ல முறையில் தயாரிக்கிறோம்.

தேவைக்கு எழுதுங்கள்.

ஏற்றுமதியாளர்களுக்கு விசேஷ சலுகை உண்டு.

T. K. ஷண்முக முதலியார், காரியதரிசி.

V. சோக்க முதலியார், தலைவர்.

கைத்தறிக்கு, ஸ்ரீ மெஹதாபின் யோசனை..

செய்தது என்ன ?

கைத்தறி நெசவு போன்ற குடிசைத் தொழில்களில் உற்பத்தி செய்யப்படுபவைகளின் தரம் நிர்ணயத்தை அடைய வேண்டும். சித்திர வேலைப்பாடோடு கூடிய சில சரக்குகளைத் தயாரிப்பதை விட சுலபத்தில் விற்பனையாகக்கூடிய ரகங்களை ஏராளமான ரகங்களை உற்பத்தி செய்ய வேண்டும். சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உபசாரத்தின் போது பேசிய யூனியன் கைத் தொழில், வர்த்தக மந்திரி ஸ்ரீ ஹரிகிருஷ்ண மெஹதாப் மேற்கண்ட இரு யோசனைகளை கூறியிருக்கிறார். அவர் சொன்ன யோசனைகள் மிக சிறந்தவைகளே என்பதில் சந்தேகமில்லை.

கைத்தறி நெசவுத் தொழில் இத்தேசத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாகவுள்ள முக்கியமான தொழில். இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இப்பொழுது இருப்பதைப் போன்று கஷ்டங்கள் இல்லாமல் சுபீட்சம் உண்டாகவேண்டுமானால், குறிப்பிட்ட ரகங்கள் கைத்தறிகளில் உற்பத்தியாவது அதிகமாவதோடு, தாராளமாக விற்கக்கூடியவையாகவும் அவை இருக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இந்த முறைகள் அனுஷ்டானத்தில் நிறைவேறி கைத்தறி நெசவாளர்கள் கஷ்டம் தீரும்படி ஏன் செய்யக் கூடாது? நல்ல யோசனையையே கூறியிருக்கும் மந்திரி, நடைமுறையில் அவை நிறைவேறுவதற்கு என்ன செய்திருக்கிறார்.

வந்திருக்கும் கஷ்டம்

குடிசைத் தொழில்களே கிராம மக்களுக்கு ஜீவனத்தை அளிக்கக் கூடுமாகையால் குடிசைத் தொழில்கள் இத்தேசத்தில் தொடர்ந்து இருந்து கொண்டுவருவது நிச்சயம் என்று ஸ்ரீ மெஹ்தாப் கூறுகிறார். "ஏராளமான உற்பத்தி செய்வது என்பதற்கு பதிலாக, மக்களே அந்த உற்பத்தியை செய்யும்படி பார்க்கவேண்டும்" என்பதே மக்களின் க்ஷேமத்திற்கு மகாத்மா உபதேசித்து வந்த மந்திரம். அப்படி மக்களே உற்பத்தி செய்யும் தொழில்களில் முக்கியமானது கைத்தறி நெசவு. ஆனால் இத்தொழில் இன்று எப்படி இருக்கிறது? கைத்தறி நெசவாளிக்கு நூல் கிடைப்பதில்லை என்ற கஷ்டம் இப்பொழுது கொஞ்சம் குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

ஆனால் நூல் கிடைத்தாலும், கிடைக்கும் நூல் நெசவாளர்கள் வாங்கி உபயோகிக்கக் கூடியதாக இல்லை. கொடுக்கப்படும் 40-ம் நெம்பர் நூல் அதிக விலையானதாக இருப்பதால் நெசவாளர்கள் அந்த ரக நூலை வாங்கி நெய்வதையே விட்டுவிட வேண்டிய நிலைமை உண்டாகியிருக்கிறது என்று ஸ்ரீ மெஹ்தாபுக்கு எடுத்துக் கூறப்பட்டது. மதுரை, திண்டுக்கல், சின்னாளப்பட்டி வட்டார கைத்தறி நெசவாளர்கள், அவர்களுக்கென ஒதுக்கியிருக்கும் 60-ம் நம்பர் நூலை வாங்கிக் கொள்ளவில்லையாம். குறிப்பிட்ட காலத்திற்குள் வாங்கிக்கொள்ளாவிட்டால் இனி நூல் கொடுப்பது நிறுத்தப்படுவதோடு கார்டுகளும் ரத்துச் செய்யப்படும் என்று நெசவாளர்களுக்கு கலெக்டர் எச்சரிக்கை செய்திருக்கிறார். நூல் எப்பொழுது அகப்படும் என்று ஏங்கிக் கிடக்கும் நெசவாளர்கள், கொடுக்கத் தயாராயிருக்கும் நூலையும் ஏன் வாங்க மறுக்கிறார்கள்.

காரணம் என்ன?

40-ம் நெ. நூல் அதிக விலையாக இருப்பதால் நெசவாளர்களால் வாங்க முடியவில்லை. 60-ம் நெ. நூலோ தேவையில்லாத மட்ட ரகமான கலர் நூலாக இருப்பதே வாங்க முடியாதிருப்பதற்கு காரணம். முன்னால் இருந்ததைவிட நூல் இப்பொழுது கொஞ்சம் அதிகமாக கிடைக்கிறது என்பதோடு சர்க்காரின் பொறுப்பு தீர்ந்துவிடாது. நூல் நயமான விலைக்கு கிடைக்கவேண்டும். எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த ரகம் தேவையோ அது கிடைக்கும்படி செய்தால்தான் கைத்தறி நெசவாளருக்கு இருக்கும் கஷ்டம் தீரமுடியும். 40-ம் நெ. நூல் விலை அதிகமாக இருப்பது ஏன்? வெளிநாட்டு பருத்தியைக் கொண்டு இந்த நெ. நூலை மில்காரர்கள தயாரிக்கத் தலைப்பட்டுவிட்டதால் விலை அதிகமாகி விட்டது. நூலை அதிக விலை கொடுத்து வாங்கி நெய்து விற்றால் விற்பனையாகாதாகையால் இந்த ரக நூலை நெசவாளர்கள் வாங்க முடியவில்லை. மட்ட ரக 60-ம் நெ. கலர் நூலை வாங்கி

திரும்ப சாயம் போட்டு நெய்து விற்பதில் ரொம்ப நஷ்டமுண்டாவதால் மதுரை வட்டார நெசவாளர்கள் இந்த ரக நூலை வாங்க மறுக்கிறார்கள்.

அதை செய்யட்டும்

நூல் வினியோகத்தில் இப்படியெல்லாம் கோளாறுகள் இருக்கும்போது கைத்தறி ஜவுளியில் தர நிர்ணயம் உண்டாவதோடு சுலபமாக விற்கக்கூடிய ரகங்கள் உற்பத்தியாவது எப்படி? முக்கியமான குடிசைத் தொழிலான கைத்தறி நெசவு செத்து விடாமல் உண்மையில் வளருவதுதான் மக்களின் க்ஷேமத்திற்கு நல்லது என்றால், ஒரு விஷயத்தை சர்க்கார் முதலில் நிச்சயம் செய்துகொள்ள வேண்டியது அவசியம். மில்காரர்கள் இஷ்டத்திற்கும், லாபத்திற்கும் கைத்தறி நெசவா, அல்லது கைத்தறி நெசவின் நூல் தேவைக்கே மில்களா? கைத்தறி நெசவு தேவையைப் பூர்த்தி செய்வதுதான் நூல் உற்பத்தி மில்களின் பொறுப்பு என்று சர்க்கார் முடிவு செய்து கொள்ளுவதானால் கைத்தறிக்கு எங்கெந்த இடத்திற்கு எவ்வகை நூல் தேவையோ அந்த நூலை தயாரிக்கும்படி சர்க்கார் மில்களை கட்டாயப்படுத்தட்டும். குறைந்த நெம்பர் நூல்களே கைத்தறிக்கு அதிகம் தேவைப்படுவதால் அந்த நூலின் விலை அதிகமாகாதிருக்க இந்தியப் பருத்தியையே அந்நூலைத் தயாரிக்க உபயோகிக்க வேண்டும் என்றும் சர்க்கார் செய்யட்டும். இதைக்கூட சரிவர செய்யாமல் வெறும் தத்துவம் பேசி என்ன பயன்?

(இக்கட்டுரை நவம்பர் 7-ம் தேதியன்று வெளிவந்த 'தினசரி' யின் தலையங்கமாகும்.) ●

கடமையைச் செய்வோம்!

க. பரமசிவன்

என்னாடு, எனது நலம் என்றல் நன்று.
இன்மைதனை ஒழித்திடுவோம் என்றல் நன்று.
சின்னாட்கள் அல்ல, நெடுங்காலம் தொட்டு,
சிதைத்து வரும் சுரண்டல் தனை அழித்தல் நன்று.
எந்நாட்டு மக்களே எனதன்பிற்கு - இல்லை,
என் வணக்கத்திற்குரியோரே, நீர்
முன்னாளில் இருந்தது போல் இந்நாளில்லை;
முடங்கியே கிடப்பதுவும் நல்ல தல்ல;
பொன்னாடு, பொன்னகரம், பொற்காலம், - என்றால்,
பொன்னாலே செய்ததல்ல - மக்கள் இன்னும்
இன்மையிலே அழிகின்ற நிலைமை மாய,
எழுமன்றோ, புதுமை மிகு உலகம்; அந்த
இன்னாடு, இன்னகரம், இனிமைக் காலம்
எழுமென்று, எழுப்புவோமென்று சொல்லி,
இந்நாட்டு மக்கள் எல்லாம் எழுதல் வேண்டும்;
இன்ப மிகு வாழ்வதனை அமைக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

அத்தகைய மாண்பு மிகு இனத்தை ஆக்க,
அருந்தமிழின் பெரியோரே தோழர்மாரே
மேத்தவுள கடமை யெல்லாம் நம்மைச் சாரும்;
மேன்மையோடு வாழ்வதுமே நம்மைச் சாரும்;
ஆகையினால் வரப்போகும் தேர்தல் தன்னில்,
ஆய்ந்ததன் பின் நாம் அடையும் முடிவைக்கொண்டு,
காகத்தைப் போல் நம்முள் வலிமை யாக்க,
கன்றுகளின் வளர்ச்சி போல் முன்னாற் செல்ல,
மேகத்தை வரவழைத்து விளைவு கட்ட,
மேன்மை மிக்கோர் தமிழர் என்று உலகு கூற,
ஆகும் வகை வேலைகளைச் செய்ய வல்லார்,
அறிவாளர், கலைஞர், நல்லாட்சித் தீரர்,
அவர்கள் எல்லாம் தொண்டர்களாய் இருந்தால் மட்டும்,
அவர்கள் எல்லாம் தொண்டு செய்வார் என்றால் மட்டும்,
அவர்களுக்கே அளிப்போம் நம் வாக்குரிமை,
அவர்கள் தான் நம் நாட்டின் ஆட்சி காப்போர்

திருத்தம்.

சென்ற மாத "கைத்தறி" இதழின் 22-ம் பக்கத்தில் "பள்ளிப்பாளையம் நெசவாளர் கூட்டத்தில் கோரிக்கை" என்ற தலைப்பின் கீழ் பிரசுரமான செய்தியின் கடைசீ பாராவில் கண்டுள்ள விஷயங்கள் உண்மைக்குப் புறம்பானதென்றும் ஏதோ, அரசியல் காரணங்களையொட்டி எழுந்த அனாவசியமான புகார் என்றும் பள்ளிப்பாளையம் நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியின் தலைவர் அறிவிக்கிறார். தவறு ஏற்பட்டதற்கு வருந்துகிறோம். —ஆசிரியர்.

A PUBLIC LIBRA
29 MA
MA

கைத்தறி

வேட்டி புடவைகள் நெய்திடுவான்—அவன்
வீட்டிலே பார்த்தால் துணிப்பஞ்சம்,
—திருமூர்த்தி

★ **கோவை 15—12—'51.** ★

கன்சியூமர் நூல் கோட்டா.

நமது மாகாணத்தில், சாயச்சாலைகள், கைத்தறி நெசவு பாக்டரிகள் போன்ற ஸ்தாபனங்கள் சிலவற்றிற்கும், சில விரல் விட்டு எண்ணிவிடத் தக்க தனி நபர்களுக்கும் "கன்சியூமர் நூல் கோட்டா" என்ற பெயரில் விசேஷச் சலுகை காட்டப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இந்த விசேஷச் சலுகைக்குக் காரணமாகச் சொல்லப் படுவது; அவர்கள் பரம்பரையாக மேற்கண்ட தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளார்கள் என்பதே.

ராஜ்யத்தில் உள்ள 8 லட்சம் நெசவாளர் குடும்பங்கள் தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்காமல் திண்டாடும்போது, சிலருக்கு விசேஷ சலுகை காட்டப்படுவது எவ்வகையிலும் நியாயமாகாது என்பதை நாம் எடுத்துக் காட்டித் தான் சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டுமென்ப தில்லை. ஏனெனில்; எண்ணற்றதடவைகளில் சர்க்காருக்கு, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத் தின்படி, இந்த "செல்லப் பிள்ளை ஏற்பாடு" நடை முறையில் இருந்துவருவது தவறு என்று பல ஸ்தாபனங்கள் தெளிவாக எடுத்துக் காட்டியுள் ளன. இருந்தும், அந்த நிலை மேலும் நீடிக்கத்தான் செய்கிறது! பாரபட்சமான இம்முறையை காங் கிரஸ் சர்க்கார் மாற்றிக்கொள்ளத் தயாராக இல் லாத போதுதான், நெசவாளர்களுக்குப் போது மான நூல் கொடுக்க காங்கிரஸ் மீண்டும் இத் தேர் தலில் வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தால் முயலும் என வாக்குறுதியளிக்கிறது. இப்படிக் கூறுவது நெசவாளர்களைஏமாற்றுவதற்கு ஒப்பாகு மெனக்கூட வாக்குறுதி கூறுவோர் எண்ணமாட் டார்கள் போலிருக்கிறது.

ஒரே ஊரில் ஒரு தறிகாரன் 2 ராத்தல் நூல் பெற்று, அதை நெய்ய முடியாது யாருக்காவது விற்றுவிட்டு, கற்றாழைக் கிழங்கையும், புளியங் கொட்டையையும் தின்று காலம் கழிக்கும்போது தான், இதே காங்கிரஸ் சர்க்கார், சில பெருச்சாளி களுக்கு கன்சியூமர் நூல் கோட்டா என்ற பெய ரில் தறி ஒன்றுக்கு 20 ராத்தல் நூல்வரை சப்ளை செய்கிறார்கள்.

மலைக்கும், மடுவுக்குமுள்ள இவ் வித்தியா சத்தை புத்தி பூர்வமாக தெரிந்தே அநுமதிக்கிறார் கள் என்றால், யதார்த்தமாகவே இவர்கள் எப்படி எதிர்காலத்தில் நெசவாளர்களின் தொழில் தேவைக்குப்போதுமான நூலை ஆட்சிக்குவந்தபின் கொடுப்பார்களோ?

ராஜ்யத்திற்கு வரும் 17,000 பேல் நூலில் 1800 பேல் நூல்தானே விசேஷ சலுகையாகப் போகிறது. இதை ஏதோ பிரமாதமாகவித்யாசம் காட்டப்படுவதாக எப்படிச் சொல்வது என்று பட்டினி கிடக்கும் நெசவாளர் உலகை நோக்கி நீதி உலகம் பரிகாசம் செய்கிறது. அதோடு மட்டு மல்லாமல்; பரம்பரையாக அவர்கள் இத்தொழி லைச் செய்து வருவதால்அவர்களுக்குஇது போன்ற ஒரு சிறு சலுகையாவது இருப்பது நியாயம்தான் என்று கூடச் சொல்கிறது.

பரம்பரையாகத் தொழில் செய்தவர்கள் என் பதற்காகச் சலுகை காட்டப்பட வேண்டுவது நியாயம்தான் எனில், இந்தப் பாரபட்சமான சலு கை கூடாது என்று சொல்வோர்கள் பரம்பரை யாகத் தொழில் செய்யாது சோம்பேறிகளாய் இருந்தவர்களா என்ன?

அப்படியானால் அந்தப் பரம்பரைப் பாத்தி யம் கொண்டாடுபவர்களுக்கு கிடைக்கும் அல் லது கொடுக்கப்படும் நூலின் அளவு ஏன் மற்றவர் களுக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யக் கூடாது என்று கேட்கிறோம்.

உணவுப் பொருளைப்போல எப்போது நூலும் பங்கீடுத் திட்டத்திற்குள் வந்ததோ, உணவுப் பொருளைப் போலவே எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டு நூலையும் கொடுக்க நடவடிக்கை எடுத் துக்கொள்வதுதான் நியாயமாக இருக்க முடியும். ஒருவருக்கு 6 அவுன்சு அரிசியும், மற்றொருவருக்கு 16 அவுன்சு அரிசியும் பங்கிட்டு சர்க்கார் கொடுத் தால் அதைப் பங்கீடு முறையென்று நாம் கூறு வோமா?

"கைத்தறி" பொங்கல் மலரில் விளம்பரம் செய்யுங்கள்.

அதற்குப் பதில் பாரபட்சமான முறை—நயவஞ் சக ஏற்பாடு என்றுதானே நாம் சொல்லுவோம். அதுபோல சொல்லத்தான் வேண்டியிருக்கிறது கன்சியூமர் நூல் கோட்டா முறையை அமுலுக்கு வைத்துக்கொண்டிருக்கும் ஏற்பாட்டை.

கன்சியூமர் கோட்டாவும், இன்ன பிற சலுகைகளும் நடைமுறையில் இருக்கவேண்டுவது தான் நியாயமெனில், அவர்களுக்குள்ள வசதியை, சவுகரியத்தைப் பிறர்களுக்கும் ஏற்பாடு செய்து கொடுக்கட்டும். அதுதான் நியாயமானதாகவும், நேர்மையுள்ளதாகவும் இருக்கும்.

விசேஷச் சலுகையின் பயனாக கன்சியூமர் நூல் கோட்டா பெறுபவர், தறிக்கு 20 ராத்தல் நூல் பெறுகிறார் என்றால் அதே அளவு நூல் மற்ற நெசவாளர்களுக்கும், மாஸ்டர் வீவர்களுக்கும் கிடைக்கும்படியாக சர்க்கார் ஏற்பாடு செய்யட்டும். அதை நாம் வரவேற்கிறோம்.

பரம்பரையாகத் தொழில் செய்தோம் என்கிற பாத்தியதை கொண்டாடி, ஏனைய தறிகாரர்களுக்கு, மாஸ்டர் வீவர்களுக்குக் கிடைக்கும் நூலின் விலையைவிடக் குறைவாகவும், அளவில் அதிகமாகவும் நூல் பெறும் இவர்கள், பொதுமக்களுக்கு குறைந்த விலைக்கு துணி உற்பத்தி செய்து கொடுக்கிறார்களா என்ன? மார்க்கெட் நிலவரத்தை யொட்டி நெசவாளியின் கூலியைக் குறைத்து, துணி விலையை உயர்த்திக் கொள்ளை யடிக்கிறார்களே, இந்த வாய்ப்பை அவர்களுக்கு உண்டாக்கிக் கொடுப்பதுதானா ஒரு மக்கள் சர்க்காரின் வேலையாக இருப்பது?

எந்த விதத்திலும் நியாயம் கற்பிக்கமுடியாத இந்தப் பத்தாம்பசலி ஏற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்; ஆட்சேபிக்கிறோம்.

குறிப்பாக இந்தத் தேர்தல் காலத்தில் தமிழ் நாட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு வார்த்தை சொல்லி வைக்க வேண்டுவது இச் சந்தர்ப்பத்தில் மிக அவசியமாகிறது. உங்களில் பலருக்கு காங்கிரஸ் மகாசபைக்கு இத் தேர்தலில் வாக்களிக்க ஆசை இருக்கலாம். எதிர்காலத்தில் அரசாங்கம் அமைக்கப் போகிறவர்களும் காங்கிரஸ்காரர்கள் தான். எனவே, நீங்கள் உங்கள் வட்டார காங்கிரஸ் சட்டசபைப் பிரதிநிதியிடம் எழுத்து மூலமாக எழுதி வாங்குங்கள்; "**நான் சட்டசபைக்குப் போனால் கன்சியூமர் கோட்டா போன்ற பாரபட்சமான முறைகளை அடியோடு ஒழித்துக் கட்டுவேன்**" என்று. நாளை அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டசபைக்குச் சென்றால், இந்த வாக்குறுதியை நிறைவேற்றும்படி செய்ய அவரை அப்போது தான் தூண்ட முடியும். ஸ்ரீ காமராஜ் அவர்களின் கருணையால்தான் நெசவாளர் சமூகத்திற்கே—வர்க்கத்திற்கே பிரதிநிதித்துவமில்லாமல் ஆக்கப்பட்டு விட்டதே. எனவே தான் குறைந்த பட்சம் இதையாவது தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களிடம் எழுதி வாங்குங்கள் என்று நாம் ஆலோசனை கூறுகிறோம்.

அதே காலத்தில் வட சென்னை, காஞ்சீபுரம், சேலம், ஸ்ரீவில்லிபுத்தூர், சித்தூர் போன்ற இடங்களில் நெசவாளர் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் சட்டசபைத் தேர்தலில் சுயேச்சையாகவும், ஐக்ய முன்னணியின் சார்பாகவும் தேர்தலுக்கு நிற்கிறார்களல்லவா? அவர்களுக்கு ராஜ்ய நெசவாளர்களும், குறிப்பாக அவ் வட்டார நெசவாளர்களும் தங்களின் பூரண ஆதரவைக் கொடுப்பதுடன், சகோதரத் தொழிலாளர்களும், பொதுமக்களும் ஆதரவு கொடுக்கும்படி செய்ய பெரிதும் முயற்சிக்கவேண்டுமெனக்கோருகிறோம்.

எவ் வகையிலும் கன்சியூமர் நூல் கோட்டா போன்ற சகல பாரபட்ச வினியோக முறைகளும் தொலைக்க இந்தத் தேர்தலை கைத்தறி நெசவாளர்கள் ஒரு வாய்ப்பாக எண்ணி உபயோகித்துக் கொள்வார்கள் என்று நாம் திடமாக நம்புகிறோம்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

***No. A. 1601*, ஸ்ரீவில்லிப்புத்தூர்**

பொதுமக்களின் நலனே குறிக்கோளாகக்கொண்டு உடுக்கமெல்லியதும் கவர்ச்சிகரமான பேட்டு தினுசுகளிலும், வேட்டி துண்டு ரகங்களும் எல்லா அகலங்களிலும் காடா பீசுகளும் ஏராளமாகத் தயாரிக்கிறோம்.

கல்கத்தா மார்க்கெட்டுக்கு ஏற்ற 20s & 40s நூலில் 2x9, 2x10 ஜோடி ரகங்கள் கைவசம் உள்ளன. மொத்ததேவைக்கு எழுதுங்கள். முன் ஒப்பந்தம்செய்து கொள்ளலாம்.

தற்சமயம் விலைமிகவும் குறைத்துள்ளோம்! **தேவைக்கு எழுதுங்கள்!!**

A. K. ஞானியார், செயலாளர். P. குருசாமி, தலைவர்.

நல்ல காலம் வருது!

“நல்ல காலம் பிறக்குது.... கைத்தறி நெசவாளருக்கு நல்ல காலம் வருகுது. பஞ்சம் பறந்து பட்டினி தொலைந்து வீடுதேடி நூல் பேல்கள் வரப் போகுது ஜக்கம்மா!.... ஓட்டுப்போடு ஜக்கம்மா........ அய்யாவுக்கு வரப் போகுது நூலு ஓட்டுப்போடு” என்று குடுகுடுப்பாண்டி வேஷத்தில் இப்போது பலர்கிளம்பியுள்ளனர். நெசவாளரின்நிலைமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. தேர்தல் சமயத்தில்கண்ணீர்வடிப்பது போல் பாவனை செய்யும் அன்பர்கள் இதற்கு முன்பு எங்கே போயிருந்தார்கள்? வோட்டுக் கேட்க நெசவாளியின் வீட்டுப்படி ஏறி இறங்கும்போதுதான் அடுப்பில் பூனை தூங்குவது அன்பர்களின் கண்ணில் படுகிறது.

ஃ ஃ ஃ

கோவை நெசவாளர்களின் துயரம் குறித்து கோவை ஜில்லா சட்டசபை மெம்பர்களும் பார்லிமெண்ட் மெம்பர்களும் சென்னை மந்திரிகளுக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளனராம்.

ஜனவரி எட்டாம்தேதி ஓட்டு போடும் திருநாள். டிசம்பர் எட்டாம் தேதி தந்தி அடிக்கும் திருநாள்! “நெசவாளர் துயரங்களைப் பல தடவை எடுத்துச் சொல்லியும் சர்க்கார் கவனியாமல் இருப்பது கண்டு வருந்துகிறோம்....” என்று தந்தி கூறுகிறது. சர்க்கார் கவனியாமலிருப்பது இன்றுதான் இவர்களுக்குத் தெரிகிறதா? லட்சக் கணக்கான நெசவாளர்களின் ஜீவ மரணப் பிரச்னையை சர்க்கார் கவனிப்பதற்கு இந்த அன்பர்கள் பார்லிமெண்டிலும், அசெம்பௗியிலும் இதுவரையிலும் என்னசெய்தார்கள்?

நூல் பஞ்சம் ஆரம்பமான போதே விநியோக ஊழல் அம்பலமாயிற்று. ஒரு தறியில் நெசவு ஆரம்பமாகக் குறைந்தபட்சம் நான்கு பவுண்டு நூல் தேவை. ஆனால் இப்போது இரண்டு பவுண்டு நூல்தான் கிடைக்கிறது. இந்த லட்சணத்தில் தறியில் நெசவு வேலை நடக்குமா? தறிக்கு குறைந்தபட்சம் கூடப்போதாத நூலை வைத்துக் கொண்டு நெசவாளிகள் என்ன செய்வார்கள்? அதிக விலை கிடைத்தால் அதை விற்பதைத் தவிர வேறு வழி கிடையாது.

ஃ ஃ ஃ

80, 100 நெ. நூல் கோவை, மதுரை, சேலம் ஜில்லாக்களில் உள்ள நெசவாளர்களுக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. இக்குறிப்பிட்ட ரக நூலை உற்பத்தி செய்யும் மில்களும் கோவை ஜில்லாவில் அதிகமாகிவிட்டன. உற்பத்தியும் பல மடங்கு பெருகியுள்ளது. பிறகு நெசவாளர்களுக்குப் போதிய அளவு நூல் ஏன் கிடைப்பதில்லை? அதுவும் இக்குறிப்பிட்ட ரகங்கள் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறதென்று சொல்கிறார்கள்!

ஆள் மாறாட்டம் இட மாறாட்டம் இருக்கிற எந்த விஷயமும் உருப்படாது. நூல் ரகங்களை ஒதுக்குவதில் இட மாறாட்டம் இருப்பதாகத் தெரிகிறது.

கோவையில் உற்பத்தியாகும் 100-ம் நெம்பர் நூல் பேல்களை மேற்கு வங்காளத்திற்கு அனுப்பும்படி உத்திரவு வருகிறது. மில்லிலிருந்து 100-ம் நெம்பர் நூல் பேல்களை கல்கத்தாவிற்கு அனுப்பிவைத்தால் “100-ம் நெம்பர் நூல் பேல்கள் எங்களுக்கு வேண்டாம். இவை இங்கு தேவையில்லை” என்று கல்கத்தாவிலிருந்து தந்தி அடித்து பேல்களையும் எடுக்க மறுத்துவிடுகிறார்களாம். கோவையிலிருந்து பேல்கள் கல்கத்தா சென்று அங்கு வேண்டாமென்று சொல்லி மீண்டும் பேல்கள் திரும்பிவர இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிடுகிறது! யாருக்கு நூல் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் ரயில்வேகாரர்களுக்கு வருமானம் கிடைத்துவிடுகிறது.

வேண்டாமென்று திருப்பி அனுப்புகிறவர்களுக்கு 100-ம் நெம்பர் நூல்பேல்கள் செல்கின்றன. 100-ம் நெம்பர் நூலுக்கு ஆலாய்ப்பறக்கிற அரைப்பட்டினி நெசவாளிக்கு பவுண்டு கணக்கிலும் அவுன்ஸ் கணக்கிலும் முற்றுப்புள்ளி வைக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

ஒரு மில்லில் ஒரு மாதம் 100 ம நெம்பர் நூல் உற்பத்தி குறிப்பிட்ட காரணத்தினால் குறைந்துவிட்டது. அந்தமாதம் 100-ம் நெம்பர் ரக நூல் 62 பேல்கள் அம் மில்லில் உற்பத்தியாயிற்று. இதில் 31 பேல்களை ஒரு குடும்பத்தாருக்கு ஒதுக்கினார்களாம். விநியோக விபரீதம் எப்படியிருக்கிறது?

ஃ ஃ ஃ

முதன் மந்திரி ஸ்ரீ குமாரசாமி ராஜாவிடம் நெசவாளர்கள் தூது சென்றார்கள். சென்னைக்கும் பல முறை சென்றார்கள். டில்லிக்கும் தூது சென்றார்கள். பட்டினி ஊர்வலம் நடத்தினார்கள். மகாநாடு கூட்டினார்கள்- ஆண்களும், கைக்குழந்தைகளுடன் பெண்களும் சென்னைத் தெருக்களில் கண்ணீரும் கம்பலையுமாக சத்தியாக்கிரஹம் செய்தார்கள். இதுவரையிலும் ஏதாவது விமோசனம் கிடைத்ததா?

சர்க்கார் உடனடியாகக் கவனிக்கவேண்டுமென்று இப்போது சொல்லுகிற எம். எல். ஏக்களும் பார்லிமெண்ட் மெம்பர்களும் அப்போது எங்கே போயிருந்தார்கள்? நெசவாளர் விமோசனத்தில் இவர்களுக்கு உண்மையில் அக்கரை இருக்குமானால் சர்க்காரிடம் பரிகாரம் தேட இரண்டு வருஷங்களுக்கு முன்பே முயற்சித்திருக்கவேண்டும். அதை விட்டு ஜனவரி எட்டாம் தேதி நடக்கும் தேர்தலுக்கு டிசம்பர் எட்டாம்தேதி நெசவாளர் துயரம் பற்றித் தந்தி அடிக்கும் அன்பர்களை என்னவென்று நினைப்பது?

யு. ஆர். 15-12-51 ‘நவஇந்தியா’

.சில குறிப்புகள்!

தனிப்பட்டவர்களும், சுத்தக் கதர் உற்பத்தியும்

என்ற அறிவிப்பு ஒன்றை சென்னை ராஜ்ய சர்க்கார் வெளியிட்டுள்ளனர். ஓரளவு வரவேற்க வேண்டியதுதான். கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களின் எண்ணிக்கை, அத்தொழிலை நம்பி வாழ்ந்தவர்களின் தொகை ஆகிய விவரங்கள் எல்லாம் ஏற்கனவே நாம் நேயர்களுக்கு 'கைத்தறி'யின் வாயிலாக முடிந்தளவு விவரங்கள் கொடுத்திருந்தோம்.

சர்க்கார் தனது கதர் திட்டத்தை கைவிட்டு சுயேச்சையாக அத்தொழில் இயங்கவும், அபிவிருத்தியடையவும் வழிசெய்ய வேண்டுமென்று நாம் 6–மாதங்களுக்கு முன் கேட்டுக்கொண்டு எழுதியபோது, பொறுப்பான தலைவர்கள் பலர் கேலி செய்தனர். நான்கு மாதங்களுக்கு முன் கேலி செய்த அந்த தீர்க்கதரிசிகளே ஒன்றுகூடி நம் எண்ணத்தை ஏற்றுக்கொண்டு, 1947–ம் ஆண்டு சென்னை கதர்கட்டுப்பாடு உத்திரவை ரத்து செய்யவேண்டுமென்றும், பஞ்சப் பிரதேசங்களில் வாழும் மக்கள் கதர் நூற்பு நெசவுத் தொழில்களில் ஈடுபட எவ்விதத் தடையுமிருக்கக்கூடாதென்றும் சர்க்காரை கேட்டுக் கொண்டனர்.

கதர் சட்டுப்பாடு உத்திரவுக்கெதிராகக் கதர் அன்பர்களின் மகாநாடே தீர்மானித்தது. இப்படிப்பல வழிகளிலும் வந்தநியாயமான எதிர்ப்பைக்கண்டபின்பே மேற்கண்ட முடிவுக்குராஜ்ய சர்க்கார் வந்திருக்கிறதென்றாலும், அதிலும் ஓர் "இக்கு"வைத்திருப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

தனிப்பட்டவர்கள் கதர் உற்பத்தியில் ஈடுபட, அகில பாரத சர்க்கா சங்கமாவது, சர்க்காராவது கதர் உற்பத்தியை நடத்திவராத இடங்களில்உள்ளவர்களுக்குத்தான் லைசென்சுகள் வழங்கப்படுமென சர்க்கார் நிபந்தனை விதிப்பதானது விவேகமான செயலாகாது என்றே நாம் கருதுகிறோம்.

ஏனெனில், சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவழித்து, தீவிர கதர் உற்பத்திசென்டர்கள் என்ற பெயரில் கதர் உற்பத்தி செய்து வரும் பகுதிகள் அநேகமாக எல்லாமே இதற்கு முன் பல வருடங்களாக தனிப்பட்ட வர்த்தகர்கள் கதர் உற்பத்தி செய்துவந்த பகுதிகளாகும். அந்த பழக்கப்பட்ட ஏரியாக்களை சர்க்கார் தனது திட்டத்தின் பெயரால் ஆக்ரமித்துக்கொண்டு, பழக்கப்பட்ட இடத்தை விட்டு வேறு ஏரியாக்களில்போய் தனிப்பட்டவர்கள் கதர் உற்பத்தியில் ஈடுபடுவதென்பது நடைமுறையில் சாத்தியமானதல்ல.

அதனால் சுயேட்சையானவர்த்தகர்களுக்குப் பலவிதத் தொல்லைகளும், சிரமங்களுமே ஏற்படும். சர்க்கார் எந்த நோக்கத்தோடு-பிறரும் கதர் உற்பத்தியில் ஈடுபட வேண்டுமென்று எண்ணுகிறார்களோ, அவ்வெண்ணம்ஈடேறாது அற்குப்பதில் இன்றுள்ளநிலையே நீடிக்கும். எனவே, ராஜ்ய சர்க்கார் தங்களது உத்திரவை புனர்பரிசீலனை செய்து யாரும் எந்த ஏரியாவில் வேண்டுமானாலும்கதர் உற்பத்தி செய்யலாம் என்றுதிருத்திய உத்திரவை வெளியிட வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கிறோம்.

நெசவுத்தொழிலுக்கு சர்க்கார் அளிக்கும் உதவி!

சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக கைத்தறி ஜவுளியும், நூலும் வாங்குவாரற்றுத் தேங்கி நின்றகாலத்தே மத்திய சர்க்கார் ரூபாய் 10-லட்சம் மானியமளித்து நெசவுத்தொழிலை பாதுகாக்க முன்வந்தனர். அன்று நமது 'கைத்தறி'யில் ரூபாய் 10-லட்சம் போதுமா? என்ற தலைப்பில், கிடைக்கும் 10-லட்ச ரூபாயையும் எப்படி உபயோககரமாகச் செலவழிப்பது என்று விவரித்திருந்தோம்.

அந்த ஆலோசனைகளில் ஒன்று ஜில்லாவுக்கு ஒரு துணியை கேலண்டர் செய்யும் மிஷினை வாங்கி அமைக்க வேண்டுமென்பதாகும். நமது ஆலோசனைஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது கேட்டு 'கைத்தறி'யின் வாசகர்கள் நிச்சயம் சந்தோஷப்படுவார்கள்.

அதன்படி மத்தியசர்க்கார் ரூ. 2,15,700 மும், நமது மாகாண சர்க்கார் ரூ. 1,40,000 மும், கைத்தறி ஜவுளிகளுக்கு அழுத்தம் கொடுத்துப் பளபளப்பாக்குவதற்கு(கேலண்டர்செய்வதற்கு) ஆன இயந்திரம் வாங்கி அமைத்துக்கொள்ள பண உதவி செய்ய முன் வந்திருக்கின்றனர். அந்த இயந்திரம் வாங்கி தொழிற்சாலை கட்டி முடித்து இயக்குவதற்கு மொத்தம் ரூ. 5,60,000 செலவாகுமெனக் கணக்கிடப் பட்டிருக்கிறது. மீதித் தொகை ரூ. 2,04,300 ஐ மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கம் போட்டுக் கொள்ளும்.

இந்தத் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் தறிகாரர்களது துயர் நீங்கிவிடுமா எனச் சிலர் எண்ணலாம். துயர் நீங்காது என்று பூரணமாகச்சொல்லமுடியாது. தான் நெய்யும் துணி

கண்ணைக் கவரும்
* எண்ணற்ற *
கைத்தறி ஜவுளி ரகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்
காமதேனு டெக்ஸ்டைல்ஸ்
ஈஸ்வரன் கோவில் தெரு - ஈரோடு.

மற்ற மக்கள் விரும்பி வாங்குமளவுக்கு அதற்கு மெருகேற்றுவது என்பதே அவனுக்கு ஒரு நல்ல மார்க்கெட்டைத் தேடிக்கொடுத்தது போலத்தான். ஆகவே சர்க்கார் கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்கு உதவமுன்வரும் இந்த வெள்ளோட்டத்தை எவருமே ஆதரிப்பர் என்றே நாம் கருதுகிறோம்.

இந்தத் தொழிற்சாலை கோவை ஜில்லாவைச் சேர்ந்த ஈரோட்டில் அமைக்கப்படலாமெனத் தெரிய வருகிறது.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு பாதுகாப்பு.

ராஜ்ய தொழில் அமைச்சர் ஸ்ரீ பெருமாள்சாமி ரெட்டியார் இம்மாதம் 3-ம் தேதியன்று சென்னை ராஜ்ய கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பளிக்கும் சட்டம் ஒன்று சர்க்காரின் பரிசீலனையில் இருந்துவருவதாக தகவல் சொல்லியுள்ளார்.

கைத்தறி துணியைத்தர நிர்ணயம் செய்வதும், சில குறிப்பிட்ட ரகங்களை கைத்தறி நெசவுத் தொழிலுக்கென ஒதுக்கித் தருவதும் போன்ற பாதுகாப்பை அளிப்பதே அந்த சட்டத்தின் முக்கியநோக்கம்.

சென்ற ஆண்டே ராஜ்ய கைத்தறிக் கமிட்டியார் கூடி வகுத்துக் கொடுத்த இந்த தர நிர்ணய மசோதாவை இன்னும் பரிசீலனை செய்துவருவதாகக் கூறும்செய்தி கேட்டு வருத்தப்படுகிறோம். இம்மசோதாவை ஆதரித்து நாம் பல தடவைகளில் எழுதியும், பல ஊர்களில் பேசியும் வந்துள்ளோம். மாகாணத்தில் கைத்தறித்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருமே இந்த உத்தேச சட்டத்திற்கு ஆதரவளித்து ஓராண்டுக்கு மேலாகியும் இன்னும் அதை சட்டமாக்காமல், பரிசீலனை செய்து வருவதாகச் சொல்வது கேட்டு நாம் வருந்தப்படுகிறோம். வரப்போகும் புதிய மந்திரிசபையாவது இக்காரியத்தைச் செய்ய வேண்டுமென்று நல்லெண்ணத்தோடு தூண்டுகிறோம். ○

கோவை நெசவாளர்களின் சந்தேகங்களை காங்கிரஸ் அபேட்சகர்

ஸ்ரீ சி. சுப்ரமண்யம் போக்கினர்.

கோவை கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் விசேஷப் பொதுக்கூட்டமொன்று அதன் தலைவர் துளசி. ராமச்சந்திரன் செட்டியார் தலைமையில் 5—12—51-ந் தேதி சாரதா பாடசாலையில் நடைபெற்றது.

அதுசமயம் கோவை நகரத் தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகராக சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கும் சி. சுப்ரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார் அவரை கைத்தறி நெசவாளர்கள் கேள்விகள் கேட்டனர். மகஜரும் ஒன்று சமர்ப்பித்தனர்

நெசவாளர்கள் கேட்ட எல்லாக் கேள்விகளுக்கும் சி சுப்ரமணியம் அவர்கள் பதில் தந்தார். கைத்தறி நெசவுத் தொழிலுக்குள்ள சங்கடங்களை காங்கிரஸ் உணர்ந்திருப்பதாகவும், அதற்கு ஆவன செய்யு தான் என்றும் தயாராக இருப்பதாகவும், போதுமான நூல் கிடைக்க இடைவிடாது நெசவாளர்களோடு சேர்ந்து பாடுபடுவதாகவும், குறிப்பாக ஒரு வருடத்திற்குள் இன்றைக்கு நெசவாளர்கள் பட்டுவரும் தொல்லைகள் தீரத் தான் முயன்று முடிவு காண முனைவதாகவும், இன்னும் பல்வேறு சந்தேகங்களையும் போக்கும் முறையிலே அவர் பேசினர்.

கூட்டத்திற்குப் பெரும்பாலான நெசவாளர்கள் வந்திருந்து சி. சுப்ரமணியம் அவர்கள் கூறிய சந்தேகத் தெளிவுகளைக் கேட்டுத் திருப்திப் பட்டனர்.

பிறகு மேற்படி சங்கத்தைச் சேர்ந்த சி. கே. முனிசாமி, பி. ஏ. ராமசாமி, பி. ஜெயராமரத்னம் அவர்களும் காங்கிரஸ் சர்க்கார் தங்கள் பிரச்னையில் எப்படிப் பராமுகமாக இருந்துவந்தனர் என்பதை விவரமாக எடுத்துக் கூறினர்

கடைசியாக, நகர சட்ட சபைத் தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகராக நிற்கும் சி. சுப்ரமணியம் அவர்களையே கோவை கைத்தறி நெசவாளர்கள் ஆதரித்து வோட்டளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் ஏகமனதாக கூடடத்தில் நிறைவேற்றப்பட்டது.

காரியதரிசி சி. சி. ராமராஜ் வந்தனம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையைப் பூர்த்தி செய்ய அத்தொழிலை ஒரு கட்டுத் திட்டத்திற்குள் கொண்டுவர வேண்டுவதும், அதை வளர்த்து உற்பத்தி பெருக வழி சோல முயற்சிக்க வேண்டுவதும் மிகவும் அவசியமாகும். இதில் யாரும் யாருடைய சுதந்திரத்தையும் பறித்துவிடும் அச்சம் இருப்பதாகக் கூறும் வாதமே எழுவதில்லை.

எனவே, இன்று நூல், துணி ஆகியவைகளுக்குள்ள விலை, வினியோகக் கட்டுப்பாடுகளை எடுத்துவிடவேண்டுமென்கின்ற கோஷம் கொள்ளை லாபக்காரர்களுக்குச் சாதகமானதே தவிர, நடைமுறையில் அதை எடுத்துவிடுவதால் யாதும் பிரயோஜன மேற்படமுடியாது.

அப்படி விலை, வினியோகக் கட்டுப்பாடுகளை நீக்கவேண்டுமானால், அதற்கான சூழ்நிலைகள் ஏற்பட்டாகவேண்டும். கிராமப்புறங்களில் உணவு ரேஷன் எடுத்துவிட்டதால், அங்கெல்லாம் மக்களுக்கு நகர்ப்புறத்தில் கட்டுப்பாடு விலைக்குக் கிடைப்பதைவிட குறைவான விலைக்குத் தானியங்கள் கிடைப்பதாக யாராவது சொல்லமுடியுமா?

நிலப் பிரபுக்கள் தங்கள் நிலத்தில் விளையும் தானியங்களை சுதந்திரமாக கள்ள விலைக்கு விற்க, கண்ட்ரோலும், பங்கீடும் இடைஞ்சலாக இருந்தது. ஆகவே அவர்கள் பாமர மக்களை உபயோகப்படுத்திக்கொண்டு ரேஷன் இருப்பதால்தால் தானியம் கிடைப்பதில்லை யென்றும், அவைகளை நீக்கி விட்டால் இந்திர லோகம் ஆகிவிடும் என்றும் சொல்லி சர்க்காரைப் பணிய வைத்து கிராம ரேஷனை எடுத்துவிடச் செய்தனர். இதனால்கிராமங்களில் உள்ள சாதாரண மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்ததா, அல்லது மிராசுதாரர்களின் இரும்புப் பெட்டிகளில் மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டு குடிபுகுந்ததா என்பதை ஆராய்ந்தால் தெரியும், நூலுக்கு விலை நிர்ணய, வினியோகக் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டியதன் அவசியம்.

ஆகவே, இன்று நூலுக்கு விலை, வினியோகக் கட்டுப்பாடுகளை எடுத்துவிடவேண்டுமெனக் கூறும் கோஷத்தின் பின்னால் கொள்ளையடிக்கும் ஒரு கூட்டத்தின் நலன் தான் நிற்கிறது என்று கூறுவது எவ்விதத்திலும் தப்பாக இருக்கமுடியாது.

அதற்குப்பதில், உற்பத்தியை சர்க்கார் கட்டுப்படுத்தி, முக்கூட்டுக் கமிட்டிகள் மூலம் கணக்கெடுத்து, சர்க்கார் கட்டாயக் கொள்முதல் செய்து நூலை வினியோகிக்கக வேண்டுமெனக் கேட்பதுதான் உண்மையிலேயே நமது தேவையை அடைய — பெற நாம் முயற்சிக்கிறோம் எனக் கொள்ள முடியும்.

இன்றைக்குள்ள கட்டுப்பாட்டில் பல குறைகள் இருப்பது பிரசித்தம். அதில் யாருக்குமே அபிப்ராய வித்யாசமில்லை. அதனாலேயே கட்டுப்பாடுகள் கூடாது என்று சொல்லுவதைத்தான் கண்டிக்கிறோம். அதற்குப் பதில் கட்டுப்பாடுகளை சீர்ப்படுத்தி — முறையாக அமுல் நடத்தவேண்டுமென்றே நாம் ஆசைப்படுகிறோம் - வேண்டுகிறோம். ஆகவே கட்டுப்பாடுகளை வெற்றிகரமாக்க அதைச் சீர்படுத்த வேண்டுமெனக் கோருவோமாக. ○

நல்லவரைத் தேர்ந்தெடுப்போம்!

சேலம், சிவராமன்.

நல்லவரைத் தேர்ந் தெடுத்து,
நாட்டின் ஆட்சி ஒப்படைத்து,
வல்லுனர்களாக்கிடுவோம்—நம் ஓட்டளித்தே
வள்ளுவர்களாக்கிடுவோம்! (நல்ல)

கல்வி அறிவைக் குறித்தும்,
கற்ற அனுபவங் குறித்தும்,
உள்ள நிலைமை குறித்தும்—நம் ஓட்டளித்தே
உத்தமரைத் தேர்ந்தெடுப்போம்! (நல்ல)

கஷ்டப்படும் ஏழை மக்கள்
இஷ்ட மெல்லாம் தானறிந்து,
நஷ்ட மில்லாத் திட்டம் தீட்ட—நம் ஓட்டளித்தே
நல்லவரைத் தேர்ந்தெடுப்போம்! (நல்ல)

சட்ட வட்ட மாகப் பேசி,
திட்ட மிதோ என்று வீசி,
சட்ட மன்றம் ஏக எண்ணும்—நபர்க்கு ஓட்டளித்தே,
சங்கடத்தி லாழ்ந்து விடோம்! (நல்ல)

சத்தியமும் நேர்மை அன்பும்
சாந்தமோ டிந் நாட்டின் பண்பும்,
மேத்தவும் தன் திட்டமென்றால்—நம் ஓட்டளித்தே,
மேலோரைத் தேர்ந் தெடுப்போம்! (நல்ல)

வள்ளுவன் குறளைப் போல
வன்மை, வரை, நேர்மை தூய்மை,
தெள்ளு உரை, தானியற்ற—நம் ஓட்டளித்தே,
தேர்ந் தெடுப்போம் நல்லவரை! (நல்ல)

சேலம் குகை கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் சங்க மகாசபைக் கூட்ட நடவடிக்கை.

மேற்படி சங்கத்தின் மகா சபைக்கூட்டம் 18 11—51.ம் தேதியன்று விமரிசையாக நடைபெற்றது. இன்றைய தொழில், வர்த்தக நிலைகள் பற்றிப் பல முக்கியதீர்மானங்களை மகாசபை நிறைவேற்றியதோடு வரும் ஆண்டுக்கு, தலைவர்: கே. ஆர். சி. சென்னி செட்டியார், உபதலைவர்கள்: சே. ஆர். டி. ஆர். பெருமாள் செட்டியார், சி. சித்தா செட்டியார், காரியதரிசி: ஆர். கோவிந்தராஜு, உதவிக் காரியதரிசி: எம். பி. என். பெருமாள் செட்டியார், பொருளாளர்: பி. ஆர். பி. ரங்கசாமி செட்டியார்.

ஆகியோர்களை சங்க நிர்வாகஸ்தர்களாகவும் தேர்ந்தெடுத்தது.

நிறைவேறிய தீர்மானங்கள்.

நம் ராஜ்யத்தில் கைத்தறிகளுக்குத் தேவையான அளவைவிட பல மடங்கு அதிகமாக நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. அகில இந்திய திட்டப்படி நூல் ஒதுக்கப்படுவதை நிறுத்தி, நம் ராஜ்யத்தின் தேவையைப்பூர்த்தி செய்து மீதியைத்தான் நம் ராஜ்யத்திற்கு வெளியே அனுப்ப வேண்டுமென்று சர்க்காரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

60 நெ. 80 நெ. ஆகிய மிக மெல்லியரகநூல்களுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட பஞ்சினால் தயாராகும் நூல்களுக்கும் வினியோக, விலை கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்று இச்சங்கம் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறது.

இப்பொழுது வினியோக கட்டுப்பாடு முறைப்படி மாஸ்டர் வீவர்கள் தங்களிடம் நெய்து வரும் தறிகளுக்குப் போதுமான அளவு நூல் பெற முடியவில்லை. மாதம் முழுவதும் தறிக்காரர்களுக்கு வேலை கொடுக்கமுடியவில்லை. கண்ட்ரோல் இல்லாத காலத்தில் மாஸ்டர் வீவர்கள் மொத்த வியாபாரிகளிடம் தங்களுக்குத் தேவையான அளவு நூல் சப்ளை பெற்று வந்தார்கள். இப்பொழுது அந்த வசதியில்லை. கார்டுகளுக்கு கொடுக்கப்படும் மிகக் குறைந்த அளவு நூலைக் கொண்டு மாதம் முழுவதும் தறிக்காரர்களுக்கு வேலை கொடுக்கமுடியாமலிருக்கிறது. ஆகையால் ஒரு குறிப்பிட்டகாலத்தில் மாஸ்டர் வீவர்கள் கொள்முதல் செய்த நூல் அளவை ஆதாரமாகக்கொண்டு மாதா மாதம் அவர்களுக்கு நூல் வினியோகிக்க உத்திரவிட வேண்டுமென்று சர்க்காரை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

இப்பொழுது அமுலிலுள்ள பூர்வாங்க நூல் வினியோக கட்டுப்பாட்டின் கீழ் உற்பத்தியாளர்களுக்கும் தறிக்காரர்களுக்கும் தேவையான அளவு நூல் கிடைப்பதில்லை. சிக்கலும் ஊழலும் நிறைந்த கட்டுப்பாடுதிட்டங்களை ஒழுங்குபடுத்தி தேவையான ரக நூல் போதுமான அளவு நிச்சயமாக கிடைக்க வழி செய்யவேண்டும். இது இயலாவிட்டால் நூல் வினியோகக் கட்டுப்பாட்டைநீக்கி உண்மையான தறிக்காரர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் தேவையான ரக நூல் போதுமான அளவு கிடைக்கும்படி வழிசெய்ய வேண்டுமென்று சர்க்காரை இச்சங்கம் வற்புறுத்துகிறது.

வெளி நாட்டுப் பருத்தியை குறைந்த விலையில் ஏராளமாக இறக்குமதி செய்யப்படுவதாக சர்க்கார் அறிவிப்பதாலும், படிப்படியாக கட்டுப்பாடுகளை அகற்றவும் மில்களின் உற்பத்தியை பெருக்கி ஊக்கமளிக்கவும் சர்க்கரை மில்களுக்கு விலை வினியோக விஷயத்தில் கட்டுப்பாட்டை தளர்த்தியிருப்பது போல மில்களிலிருந்து நியாயமான ஓரளவு பேல்களை சர்க்கார் கட்டுப்பாடு விலைக்குப் பெற்று கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வினியோகிக்கவும், உபரியாக உற்பத்தி செய்யும் நூலை விலை வினியோக கட்டுப்பாடின்றி விற்க மில்களை அனுமதிக்கவும் வேண்டுமென்று சர்க்காரை இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அகிலஇந்திய கைத்தறி போர்டும், சென்னை ராஜ்ய கைத்தறி போர்டும் பெயரளவிற்கு நியமிக்கப்பட்டிருப்பதைப்பற்றி சங்கம் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி போர்டுகள் உண்மையான சேவை செய்யும் வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

ஜில்லா கைத்தறி போர்டுகளை அமைக்கவேண்டுமென்னும் சர்க்காரின் திட்டம் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஜில்லா கைத்தறி போர்டுகளை ஏற்படுத்தி இவைகள் இத்தொழிலுக்கு நல்ல விதத்தில் சேவை செய்யும் முறையில் அமைக்க வேண்டுமென்று சர்க்காரை இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

சட்ட சபையில் கைத்தறித் தொழிலுக்கென போதிய பிரதிநிதித்வம் அளிக்கவேண்டும். கைத்தறித் தொழில் நம் நாட்டு குடிசைதொழில்களில் பிரதானமானது. இத்தொழிலினால் நம் நாட்டில் பல லட்சமக்கள் ஜீவிக்கிறார்கள். சமீப காலத்தில் இத்தொழில் பல இன்னல்களுக்கு உட்பட்டு வருவதாலும், சட்டுப்பாடு உத்திரவுகள் காரணமாக நடைமுறையில் பல பிரச்னைகள் இத்தொழிலைச் சார்ந்த மக்களை பாதித்து வருவதாலும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து

இத்தொழிலுக்கென பிரத்யேகமான மந்திரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

சர்க்கார் நூல் சப்ளை செய்வதில் கூட்டுறவு சங்கத் தறிகளுக்கும் மற்ற தறிகளுக்கும் பாரபட்சமாகவும் நேர்மையற்றதாகவும் நடந்து கொள்வதை சங்கம் பலமாக ஆட்சேபிக்கிறது. இதனால் நெசவாளிக்கும் நெசவுத் தொழிலுக்கும் மிகுந்த பாதகமேற்பட்டிருப்பதால் சர்க்கார் கைத்தறிகள் பூராவையும் சமமாக பாவித்து நேர்மையான நூல் வினியோகம் செய்யுமென எதிர்பார்க்கிறது.

கைத்தறித் தொழில் மில் போட்டியை சமாளிக்கவேண்டுமானல் குறிப்பிட்ட ரகங்களை கைத்தறிக்கென ஒதுக்கப்பட்டு, மில்கள் அந்த ரகங்களை உற்பத்தி செய்யாமல் தடை செய்யப்பட வேண்டுமென்றும் இச்சங்கம் சர்க்காரை கேட்டுக்கொள்கிறது.

சென்னை ராஜ்யத்தில் நூல் உற்பத்தியைப்பற்றியும் ஒதுக்கப்படும் நூல் பேல்கள் எப்படி வினியோகிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் சர்க்கார் தகவல்கள் வெளியிடாமலிருப்பது ஜவுளித் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கு மிக அசௌகர்யமாகயிருக்கிறது. ஆகவே, ராஜ்யத்தில் மில்கள் உற்பத்தி செய்யும் நூல் பேல்கள், ராஜ்யத்திற்கு ஒதுக்கப்படும் நூல் கோட்டா கூட்டுறவு சங்கங்களில் நெய்யும் கைத்தறிகள் அவைகளுக்கு வெளியேயுள்ள கைத் தறிகள், விசை தறிகள், பேக்டரிகள் முதலியவைகளுக்கு சப்ளை செய்யப்படும் பேல்கள் ஜில்லா வாரியாக பிரிக்கப்பட்டு வினியோகிக்கப்படும் புள்ளி விவரங்கள் ஆகியவைகளை, அறிக்கை மூலம் சர்க்கார் மாதா மாதம் கெஜட்டிலும் பத்திரிகைகளிலும் வெளியிடவேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது. ●

(23ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆரம்பமாகவில்லை எனவும், உயர்ந்த விலை நூல்களைக் கொண்டு உற்பத்திசெய்வது தற்போதைய நிலைமையில் மார்க்கெட் கஷ்டத்தை இரட்டிப்பாக்குகிறது என்றும் எடுத்துக்காட்டினர். எனவே, தற்போதைய குறைந்த விகிதத்தில் நூல் வினியோகத்தை மேற்கொள்ள தக்கநடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ளுமாறு மாகாணகூட்டுறவு சொஸைட்டியிடம் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

மாகாண நெசவாளர் சங்கத்தில் கூடுதலாக 'பங்கு' வாங்குதல்.

ஏற்கெனவே கேட்டுக்கொள்ளப்பட்டபடி கூடுதலாக மாகாண சொஸைட்டியின் "பங்கு'களை எடுத்துக்கொள்ளாத சொஸைட்டிகள் உடனடியாகத் தாமதியாதுபங்குகளைஎடுத்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

சிப்பந்திகளிடமிருந்து 'செக்யூரிடி' பெறுதல்.

சிப்பந்திகளிடமிருந்து பெற வேண்டிய 'செக்யூரிட்டி'களை இன்னும் பெற்றுக்கொள்ளாத சொஸைட்டிகள் 31-12-51க்குள் அவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளிலிருந்து நெசவாளரல்லாத மெம்பர்களை நீக்குதல்.

பொதுவாக இந்த விதிக்குப் பின்னுலுள்ள அடிப்படை தத்துவம் ஒத்துக்கொள்ளப்பட வேண்டியதென்றாலும், ஒட்டுமொத்தமாக இந்த விதியை அமுல் நடத்துவதனல் எதிர்மறை விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதோடு சில சொஸைட்டிகளின் நிர்வாகமும் ஒழுங்காக செயலாற்றும் தன்மையும் நெசவாளரல்லாத அங்கத்தினர்கள் நீக்கப்படுவதால் கெட்டுப்போகவும் கூடும். எனவே நெசவாளர் சொஸைட்டிகளில் நெசவாளர் அல்லாத மெம்பர்கள் இருப்பது அந்த சொஸைட்டிகளின் நன்மைக் குகந்ததா இல்லையா என்பதைத் தனித்தனியாக மதிப்பிட்டு நெசவாளர் சொஸைட்டிகளில் அங்கம் வகித்துவர அனுமதிக்கும் வகையில் சர்க்கார் உத்தரவு திருத்தப்பட வேண்டுமென சர்க்காரைக் கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ○

கோபிசெட்டிபாளையம் நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட் No. K. 1171
கச்சேரி வீதி, கோபிசெட்டிபாளையம் P. O.

திடமான நெசவு! **தேட்டான ரகங்கள்!**

நாங்கள் 20 நெ. முதல் 40 நெ. வரை நூலில்
வெள்ளை, காரிக்கன் காடா பீசுகள், வேஷ்டி, துண்டு மடிகள், சுங்கடி சேலை ரகங்கள்
முதலியவைகளைப் போற்றத்தக்க முறையில் புத்தம் புது மோஸ்தர்களில் தயார்செய்து வருகிறோம்.

ஏற்றுமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் விசேஷ சலுகைகள் உண்டு.

தேவைக்கு எழுதுங்கள்.

K. S. முத்துக்குமார், தலைவர்.

எண்ணை காணாத தலை! எழுந்திருக்க முடியாத உடல்நிலை! அழுதழுது அவள் கந்தை ஆடைகள்கூட நனைந்து விட்டன! கண்கள் கூர் மங்கிப் பஞ்சடைந்து விட்டன! நெஞ்சு உலர்ந்து விட்டது!

வரலாற்றில் இல்லாத வறுமை!

செடியிலே கூத்தாடும் மலர் அவள் சேலையின் விளிம்பிலே நெளிகிறது. அவள் அணிந்திருந்த வளையின் ஒலிகள், என் உள்ளத்திலிருக்கும் வாட்டத்தை ஓட்டுகிறது. குனிந்து-நிமிர்ந்து எனக்கு சோறு பரிமாறிக்கொண்டிருக்கும் என் காதலியின் மீது செலுத்திய பார்வையை, இமைகளை அசைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன். அவள் உதட்டிலே மின்னும் புன்னகை—நான் வாணிபத்திற்காக அலைகடலில் கலம் செலுத்தும்போது ஏற்படும் இன்னல்களை எதிர்த்து முறியடிக்கும் அஞ்சாமையை எனக்கு உண்டு பண்ணுகின்றன. அவளின் கருநிறக் கூந்தல் —நடுக்கடலில் குமுறும் மேகங்கள் உடுக்களின் ஒளியைக்கூட மறைத்து எங்கும் ஒரே இருள் மயமாக்கியதைக் கூடத் துச்சமென மதிக்கச் செய்கிறது.

ஃ ஃ ஃ

"சோறு போட்டு எவ்வளவு நேரமாகிறது; சிலை மாதிரி அசையாமல் இருக்கிறீர்களே" என்ற வார்த்தைகளைக்கேட்டதும் திடீரென உணர்ச்சி வந்தவனாகி, "நானா சிலை மாதிரியிருக்கிறேன்? உன் அன்புகலந்த பணியல்லவா என்னைச் சிலையாக்கிவிட்டது" என்றேன்.

"ஐயோ, விவகாரம் வேண்டாமே! ஆறிவிடுமே சோறு!" என்று கெஞ்சும் மொழியிலேயே கொஞ்சினாள் என் கோதை. "உன் உதட்டைக் கிழித்துக்கொண்டு வரும் ஒவ்வொரு வார்த்தைகளும் என் அயர்வையும் அச்சத்தையும் கிழித்தெறியக்கூடிய ஈட்டி முனைகள்; உன் அன்பும் பார்வையும், என்னை ஆக்கவேலைக்கு ஆகர்ஷிக்கும் காந்தம் போன்றது!" என்றேன். அவள் தன் தலையை நாணத்தால் கவிழ்த்துக் கொண்டாள். ஆயினும், அவள் கண்கள், என்னை ஒரு முறையும், நான் சாப்பிடும் இலையில் தேவையிருக்கும் பதார்த்தங்களை ஒரு முறையும் மாறி மாறி கவனித்துக் கொண்டேயிருந்தன.

அப்போது, மஞ்சத்தில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை அழுதது. உடனே அவள், குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டு, பலகணிக்குப் பக்கத்திலிருந்த சிறு வெள்ளிப்பேழைக்குள்ளிருக்கும் சில, கிரேக்க—ரோம நாணயங்களை அள்ளிக் குழந்தைக்கு எதிரில் அ. ஆ. எழுத்துக்களைப் போன்றும், தன் கழுத்திலிருக்கும் ஆரத்தைப் போன்றும் வரிசையாக அடுக்கி வைத்து. அழகு செய்து குழந்தையைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தவள், என்னைப் பார்த்து "ரஸம் போதுமா?" என்றாள்.

"அது, உன் மாணிக்க இதழின் மத்தியிலல்லவா ஊறுகிறது" என்றேன். மீண்டும் தலை கவிழ்த்துக்கொண்டாள். "நான், இனி வாணிபத்திற்காக வெளிநாடு செல்வதேயில்லை; அங்கு பெறும் பொன்னும் மணியும் உன் புன்னகையே இங்கு அளிக்கிறதே!" என்றேன்.

அவள் உள்ளத்தில் உவகை ஆறு கரைபுரண்டோடி இரு கண்களும் நீர்த்தேக்கங்களாகி விட்டன; தோள்கள் குலுங்கின; உடல், ஆனந்த மேலீட்டால் விம்ம, கைகளில் அணிந்திருந்த வளைகளிற் சில 'படீ'ரென உடைந்து கீழே விழுந்து சிதறின.

நான், கையலம்பிக் கொண்டு பூங்காற்றுத் தவழும் முத்தத்திற்கு வந்தேன். அவள் தன் கையில் ஏந்தியிருந்த காவிரி வெற்றிலை, "தலைவனே! நான் உன் காதலியின் மென்மைக்கு இணையாக முடியுமா?" என்று என்னைக் கேட்பது போலிருந்தது.

அவள் மடித்துக் கொடுத்த வெற்றிலையை மென்றுகொண்டே நான், "நமது பட்டாடையும் பஞ்சாடையும் ரோம் ராஜ்யத்தில் இப்போது அதிக கிராக்கியோடு விற்கின்றன; ஆதலால் நான் மறுபடியும் மரக்கலம் செலுத்தப்போகிறேன்!" என்றேன். அவள் உள்ளத்தில் சோகக் கடல் குமுறி அலைவீசியது! வருத்தத்தால். அவள் கண்கள் மீண்டும், மறுகால் ஓடும் கண்மாய்களாகி நீரைச் சொறிந்தன! உடல், ஏக்கம் மேலீட்டால் சிலிர்த்து ஒடுங்கின! கைகளில் தொங்கிக்கொண்டிருந்த மீதி வளையல்களும் கழன்று கீழே விழுந்து உடைந்து சிதறின! அவளின் கைகள் வளையல்கள் இல்லாது இயற்கையழகோடு விளங்கின. சந்தோஷத்திற்கு விம்முவதும் வருத்தத்திற்குக் குறுகுவதுமாகிய அவள் உள்ளத்தின் உயர்ந்த தன்மையை, நான் எண்ணியெண்ணி இறுமாந்திருந்தேன்.

ச. குணவரசு,
அருப்புக்கோட்டை.

சென்னிமலை கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு சங்கம் லிமிடெட்,

சென்னிமலை P. O.

எங்களிடம் 20 நெ. முதல் 30 நெ. வரை நூலில் எங்கள் சங்க அங்கத்தினர்களால் தயார்செய்த 5, 6, 7, 7½ கெஜம் 42, 44 அங்குல அகலங்களில் கலர் சேலைகளும் வேஷ்டி, துண்டு, காடா பீஸ் ரகங்களும்

விலை சரசமாய்க் கிடைக்கும்,

கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும், ஏற்றுமதியாளர்களுக்கும் விசேஷ சலுகை உண்டு.

M. P. நாச்சிமுத்து, B. A., B. L.,
தலைவர்.

பருத்தி நூலிலும் பட்டு நூலிலும் செய்யப்பட்ட பலவண்ணக் கைத்தறி ஜவுளி மூட்டை ஒன்றைக் கட்டிக்கொண்டு, பிரியமுடியாமல் நீர் மல்கும் கண்களுடனிருக்கும் என் காதலியிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றேன்.

பூம்புகார் நகரக் கடற்கரையில் காத்திருக்கும் மரக்கலங்களில் ஒன்றில் ஏறினேன். கலம் நகர்ந்தது. என் கண்களிலும் நீர் நிறைந்தது. அந்த நீரிலே! என் காதலியின் உருவம் பிரிவாற்றாத காரணத்தால் வாட்டம் தோய்ந்த முகத்துடன் தோற்றமளித்தது. ஆயினும், கடலின் அலையைக் கிழித்துக் கொண்டு செல்லும் நாவாயின் மீது தெறித்து விழும் ஒவ்வொரு சொட்டு நீரிலும், என் காதலியின் தோற்றம் எனக்கு ஊக்கமளித்துக் கொண்டேயிருந்தன!

ஃ ஃ ஃ

அந்த நாளில் தமிழகம் ஒரு பெரியவியாபார ஸ்தலமாகயிருந்தது. கைத்தறி ஆடைகளுக்கும் அன்றிருந்த வாணிபத் துறைகளிலே பூம்புகார் நகர் ஓர் தலை சிறந்த வாணிபத் துறையாகஇருந்தது. இங்கிருந்து கிளம்பிய மரக்கலங்கள், கூர்வேல் தாங்கிய ரோமாபுரி வீரர்களின் பாதுகாப்பு மிக்க வாணிபச்சந்தையிலேயுள்ள வியாபாரிகள், ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்நாட்டுத் துறைமுகத்திலேபோய் நின்றன.

நானும் என்னுடன்வந்த வேறு பல தமிழக வணிகர்களும், ரோமாபுரி வணிகர்கள் சூழ்ந்து வர அந்நாட்டு வியாபாரச் சந்தையிலே, தமிழரின் வியாபாரத்திற்கென விடப்பட்டிருக்கும் இடத்தில் அமர்ந்து, எங்கள் கைத்தறி ஜவுளி மூட்டைகளை அவிழ்த்தோம். அந்நாட்டுவியாபாரிகளும் பக்கத்து சிறு நாட்டு வியாபாரிகளும் போட்டியிட்டுக் கொண்டு வந்து தாங்கள் கொண்டு வந்திருந்த பொற்காசுகளை அளித்து விட்டு, எங்கள் கைத்தறி ஜவுளிகளைப் பெற்றுச் சென்றனர். அவர்கள் கொடுத்த பொற்காசுகளை எண்ணுந்தோறும் பார்க்குந்தோறும் அதிலே மின்னும் ஒளி, தமிழகத்திலேயிருக்கும் என் காதலியின் நகைப்பின் ஒளியை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தன.

ரோம் சாம்ராஜ்யக் கடற்கரை, தமிழகம் செல்ல இருக்கும் மரக்கலங்களில் ஒன்றில் நான் ஏறினேன். தமிழக வணிகர்கள் ஏறியிருந்த மரக்கலங்களத்தனையும், விரைந்து தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலே வந்து நின்றன. நான் பூம்புகாரில் இறங்கி வீட்டிற்கு வந்தேன். மாடியில் என் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த என் காதலி, என்னைக் கண்டதும் கீழேயிறங்கி வந்து நின்று என் நெற்றியிற் பொட்டிட்டு அழைத்துச் சென்றாள். அவள் கண்களில், நான் வீட்டை விட்டுச் செல்லும்போது கசியத் தொடங்கிய கண்ணீர், நான் வீடு வந்து சேர்ந்தபின்தான் நின்றது.

ஃ ஃ ஃ

குழந்தை வீரிட்டழுத குரல் கேட்டு நான் திடுக்கிட்டெழுந்தேன். ஆனால், எழுந்து என்ன பயன்? நேற்று இருந்த நிலைதானே இன்றும்; வீரிட்டழுத ஐந்தாறு வயதுக்குழந்தை, தானாகச் சென்று கஞ்சிப் பானையில் கை விட்டுப் பார்த்து விட்டு, பானை காலியாயிருப்பது கண்டு நீரொழுகும் கண்களுடன் "அம்மா! கஞ்சி கஞ்சி" எனக் கதறியது! கதறி என்ன பயன்? தன் அம்மாவின் கண்களிலும் கண்ணீரைத்தானே பார்க்க முடிகிறது. என் கண்ணிலும் கண்ணீரைத்தானே காண முடிகிறது. என் வயிறும் பசியால் எரியத்தானே செய்கிறது! நான், என் மனைவி, எங்களுடைய இரு கண்மணிகள், இந்நால்வருமே இரவில் பட்டினி தானே! ஒரு குடும்பமே இரவில் பட்டினி! இல்லை! என்னைப் போன்ற ஏழைக் கைத்தறிகாரர்கள் குடும்பங்கள் ஆயிரக் கணக்காக இந்த நாட்டில் உள்ளன. அத்தனை குடும்பங்களும் பட்டினி தான்! இது போன்ற பட்டினி இரவுகள்—பட்டினிப் பகல்கள் கைத்தறிகாரர் வாழ்க்கையில் சர்வ சாதாரணமாகிவிட்டன. மழைக் காலத்தில் அடிக்கொருதரம் ஏற்படும் தூற்றலைப்போல கைத்தறிகார மக்களின் கண்களில் கண்ணீர் கசிந்து கொண்டேயிருக்கின்றன

நெசவாளர்களின் பிரச்னைகளைத்தீர்க்க உடனே நடவடிக்கை எடுக்கவும்

—:O:—

கோவை ஜில்லா எம். எல். ஏக்களின் வற்புறுத்தல்

கோவை ஜில்லாவைச் சேர்ந்த பிரபல சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் கூட்டாக ராஜ்ய சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றனர்.

அக் கடிதத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு தொழிலுக்குத் தேவையான நூல் கிடைப்பதில்லையென்றும், மாதம் ஒன்றுக்கு மிக மிகக் குறைந்த பட்சமான இரண்டு ராத்தல் நூல் கிடைக்கும் போதே பல இடங்களில் நூல் பங்கீடுக் கார்டுகள் அதிகாரிகளால் ரத்து செய்யப்பட்டிருப்பதாகவும், அதனால் நெசவாளர்களிடையே காங்கிரஸ் சர்க்கார்மீது கசப்பை வளர்த்துவிடப்பட்டிருப்பதாகவும் கண்டிருக்கிறது.

மேலும் ஜில்லாவில் உள்ள 64,000 தறிகளுக்கு மொத்தம் சுமார் 25,000 தறிகளுக்கே நூல் வினியோகம் செய்யப்பட்டிருப்பதாகவும், இக் காரணத்தால் நெசவாளர்களில் பலர் வேறு வேலை தேடி ஓட நிர்ப்பத்திக்கப்பட்டுள்ளார்களென்றும் அக் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

அக்கடிதம் திட்டவட்டமாக குறைந்தபட்ச கீழ்க்கண்ட ஆலோசனைகளையாவது உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று சர்க்காரை வற்புறுத்தியுள்ளது.

அதாவது; குறைந்தபட்சம் 50,000 தறிகளுக்காவது நூல் வினியோகிக்க உடனடியாக முயற்சிக்கவேண்டுமென்றும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை தாமதம் காட்டாது ரிஜிஸ்தர் செய்து தர வேண்டுமெனறும், கூட்டுறவு நெசவாளர் சொஸைட்டிகளில் ஏழை நெசவாளர்கள் அங்கத்தினர்களாக சேர பங்குப் பணம் சர்க்கார் கடனாக அளிக்கவேண்டுமென்றும், போலித் தறிகளை ஒழிக்கத் தகுந்த நடவடிக்கைகளை விரைவில் எடுத்துக்கொள்ள முன்வர வேண்டுமென்றும் அக் கடிதத்தில் ஆலோசனைகள் சொல்லப்பட்டுள்ளன.

இக் கடிதத்தின் நகல்கள் ராஜ்ய சர்க்காரின் முதன் மந்திரிக்கும், கைத்தொழில் மந்திரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தக் கண்ணீர் என்று தான் நிற்குமென்று தறிகாரர் யாருக்குமே தெரியாது! இந்த அரசாங்கத்திற்கு—நாங்கள் சிந்தும் கண்ணீர் — குழி விழுந்து கிடக்கும் எங்கள் வயிறு—அழுதழுது கூர்ந்துநோக்கச் சக்தியற்ற எங்கள் கண்கள்—நடக்கமுடியாது தள்ளாடித் தள்ளாடிச் செல்லும் எங்கள் உடம்பு, ஆகிய இந்தக் கோர நிலை! இந்தப் பஞ்ச நிலை! என்றுதான்தெரியுமோ! நாங்கள், அந்நாளில் கடல் கடந்த நாடுகளில் உள்ள மக்களுக்கு கைத்தறி ஜவுளிகளை பொற்குவிக்களித்த இந்தத் தமிழகத்தில் தான் வாழ்கிறோம்! இல்லை! சாகிறோம்'!

ஃ ஃ ஃ

என் மனைவியினுடைய, அடக்க முடியாமல் குமுறிக் கொண்டு வரும் விம்மலின் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அந்தோ! என்ன பரிதாபம்! என் கண்மணி! ஓராண்டுகூடப் பூர்த்தியாகாத என்கண்மணி! இறந்தது! இல்லை; பாலில்லாமல் பட்டினி போட்டுக் கொல்லப்பட்டது! இக்கண்மணியை! என் மனைவி மடியில்வைத்துக்கொண்டு விம்மி! விம்மி! அழுகிறாள்! நான், விம்மி அழவில்லை! ஆனால் கண்ணீர் மட்டும் நிற்காமல் வடிந்து கொண்டேதான் இருக்கின்றன! என்னை காணாத தலை! எழுந்திருக்க முடியாத உடல்நிலை! அழுதழுது அவள் கந்தை ஆடைகள் கூட நனைந்து விட்டன! கண்கள் கூர் மங்கிப் பஞ்சடைந்து விட்டன! நெஞ்சு உலர்ந்து விட்டது! நாங்கள் நல்ல உணவருந்தி மாதக் கணக்காகின்றன! எத்தனையோ நாட்கள் பட்டினி கிடந்திருக்கிறோம்; இந்நிலையில், குழந்தைக்குத் தாயிடம் எப்படிப் பால் இருக்க முடியும்? பால் வாங்கிப் போடுவதற்கும் கையில் காசு இல்லை! ஆகவே! எங்களின் கண்மணி, இந்தப் பஞ்சை நிலையினின்று! தன்னைப்பெற்ற தாயுந் தந்தையும் பார்த்துச் சகித்திருக்கும் போதே பிரிந்து சென்றது! பட்டினியால் பிரிந்துசென்றது!! செடிக்குத் தண்ணீரில்லாமல் வாடியுதிரும் மலர் போல, என் கண்மணி! பாலில்லாமல் வாடி உதிர்ந்துவிட்டது. ‘பட்டினி!’ என்று கூற வெட்கப்படும் இந்நாட்டில், இன்று பட்டினி என்ற சொல், கடலில் ஓயாது ஒலித்துக்கொண்டிருக்கும் அலைகளைப் போல் எங்கும் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன! ○

நெசவாளர் கூட்டுறவு இயக்க கோவை வட்டார மகாநாடு.

கோவை வட்டார கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மகாநாடு 17—11—51-ந் தேதியன்று, கோவை கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் ஆபீஸில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு 22 கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலிருந்து 30-க்கு மேல் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

டிப்டி ரிஜிஸ்திரார் பி. தாமோதர மேனன் பி, ஏ., அவர்கள் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

சென்னை மாகாண நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் உபதலைவர் ஈரோடு எம். பி. நாச்சிமுத்து முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்களும், திருச்சி ரீஜனல் மார்க்கெட்டிங் ஆபீசர் சி. திருநாவுக்கரசு அவர்களும், ஸ்தல கூட்டுறவு அதிகாரிகளும் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

டிப்டி ரிஜிஸ்திரார் தாமோதர மேனன் அவர்கள்; நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை தற்போது எதிர் நோக்கி நிற்கும் பிரச்னைகளை விளக்கமாக எடுத்துக்கூறி, அவைகளைப் பரிகரிக்க மகாநாடு நல்லதொரு முடிவுக்கு வரவேண்டுமென கேட்டுக்கொண்டு மகாநாட்டின் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

மாகாண சொஸைட்டியின் உபதலைவர் நாச்சிமுத்து முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் பேசுகையில், மாகாண சொஸைட்டியார் நூல் வினியோகம் சம்பந்தமாக செய்துள்ள ஏற்பாடுகளை விவரித்துக்கூறி, இந்த ராஜ்யத்திலுள்ள எல்லா சங்கங்களும் நியாயமான பாரபட்சமற்ற நூல் வினியோகம் பெறுவதற்கான ஏற்பாடுகளை மாகாண சங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டிருப்பதாக உறுதியளித்தார். ஜவுளி நிலைபற்றி அவர் கூறும் போது; ஏற்கெனவே ஏராளமான சரக்கு மாகாண சங்கத்திடம் தேங்கியிருப்பதால் இன்னும் அதிகமாக சங்கங்களிடம் இருந்து சரக்குகளை வாங்குவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது எனச்சொன்னார்.

தற்போது நிலவுகின்ற மார்க்கெட் நிலவரங்களுக்கு ஏற்றாற்போல, கைவசம் தேங்கியுள்ள சரக்குகளை அதிவிரைவில் விற்பதற்குச் சாதகமாக இருக்கும் பொருட்டு எவ்வளவு சாத்தியமோ அவ்வளவுக்கு சரக்கின் உற்பத்திச் செலவை குறைக்க வேண்டும் என ரீஜனல் மார்க்கெட்டிங் அதிகாரி திருநாவுக்கரசு முதலியார் எடுத்துக் கூறினார்.

மகாநாடு, பல்வேறு பிரச்னைகளைப்பற்றியும் தீர்க்கமாக ஆலோசித்தவிட்டு, கீழ்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

கைவசமுள்ள இருப்பை விற்பதற்கான ஏற்பாடுகள்.

வெள்ளை ரகங்கள் உற்பத்தி செய்கிற கூட்டுறவுசொஸைட்டிகளைத் தவிர, மற்ற எல்லா சொஸைட்டிகளிலும் ஏராளமான சரக்குகள் தேங்கியுள்ளன. மாகாண சொஸைட்டியின் கையிலும் பெரிய அளவில் சரக்கு தேங்கியிருப்பதால் கொள்முதல் செய்ய அதனால் முடியாது. எனவே, சொஸைட்டிகள் இருக்கின்ற சரக்குகளை, கிடைக்கிற குறைந்த பட்ச லாப வரம்பை வைத்துக் கொண்டு உடனடியாகவிற்க சொந்தமான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

கூலி விகிதத்தை திருத்தி அமைப்பது.

பல்வேறு ரகங்களுக்கும் இருக்கும் மார்க்கெட் நிலவரங்களை வைத்துக்கொண்டு விவாதித்த பிறகு, உற்பத்திச் செலவுகளை, விற்பனை செய்வதற்கு சவுகரியமாக இருக்கின்ற அளவுக்கு குறைப்பதற்காக பொதுவாகக் கூலி விகிதங்களைக் குறைக்க வேண்டுவது அவசியம் என ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது. குறைந்த பட்ச, அதிகபட்ச கூலி விகிதங்கள் கீழ்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டது.

நெ. 20 முதல் 30 வரை கழிக்கு 12 அணு முதல் 15 அணு வரை. 40 நெ. கழிக்கு அணு 10 முதல் 12 அணு வரை. 60 நெ. செஜத்திற்கு 8 அணுவும், 80 நெ. செஜத்திற்கு 10 அணு முதல் 12 அணு வரை. 100 நெ. கெஜத்திற்கு 12 அணு முதல் 13 அணு வரை.

சாயக் கூலியை குறைத்தல்.

தற்போதைய நிலைமைகளை வைத்துக் கொண்டு பார்க்கையில் சென்னை மாகாண நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டியால் நிர்ணயிக்கப்பட்ட சாயக் கூலி விகிதங்கள் மிகவும் உயர்வாகஇருப்பதாக பொதுவில் கருதப்பட்டு, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதற்கு சாயக் கூலி விகிதமும் புனரமைக்கப்பட வேண்டுவது அவசியமாகையால் மாகாணநெசவாளர் சொஸைட்டி சாயக் கூலி விகிதங்களைத் தக்க அளவிற்குப் புனரமைப்பு செய்யவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

நெசவாளர் சொஸைட்டிகளுக்கு நூல் விநியோகம்.

சில சொஸைட்டிகளின் பிரதிநிதிகள் செப்டம்பர்மாத டெக்ஸ் மார்க் நூல்களைத்தான் தாங்கள் பெற்றுள்ளதாகவும், அவைகளில் விலை அதிகமாக இருப்பதாகவும் குறைந்த விலை நூல்களின் சப்ளை

(19ம் பக்கம் பார்க்க.)

நேஷனல் பிரிண்டிங் & டையிங் ஒர்க்ஸ்,

49/15, தாராபுரம் ரோடு, திருப்பூர் S. I. Ry.

—:o:—

நாங்கள் மக்களின் நாகரீக வளர்ச்சிக்கேற்ப, எழில்மிக்க பல வர்ணங்களில் புத்தம் புதிய பம்பாய் டிஸைன்களில் சேலை, சீட்டி ரகங்களும், டிச்சார்ஜ் ரகங்களும் திறமைமிக்க வேலை ஆட்களைக்கொண்டு உத்திரவாதமுள்ள கெட்டிச் சாயங்களில் பிரிண்ட் செய்கிரும்.

ஜவுளி வர்த்தகர்கள் எங்களின் சேவையை உபயோகப்படுத்திக் கொண்டு தங்களின் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டுகிறோம்

M. K. சின்னப்ப கவுண்டர், *உரிமையாளர்.*



பொதுமக்கள், தொழிலாளர், நெசவாளர்கட்கோர்,

வேண்டுகோள்.

அன்புடையீர்,

அடுத்த ஜனவரி மாதம் 8 ம் தேதி கோவை நகரத் தொகுதிக்கும், 12-ம் தேதி மதுக்கரை தொகுதிக்கும் நடக்க இருக்கும் சென்னை சட்ட சபைத் தேர்தலில் நான் சுயேட்சை அபேட்சகனாக நிற்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்டால் மத்தியதர உழைப்பாளிகள், தொழிலாளர்கள், ஆகியோரின் உணவு, உடை, கல்வி, வாழ்க்கைத் தர உயர்வுக்காக முழுமூச்சுடன் போராடுவேன்.

கைத்தறி நெசவாளர்களின் அல்லல்தீர, தொழிலுக்குப் போதுமான நூல் கிடைக்க, கைத்தறி ஜவுளி ஏற்றுமதி வர்த்தகம் பெருக இடைவிடாது பாடுபடுவேன்.

எனக்கு கட்சி, ஜாதி, மத வேற்றுமை கிடையாது. எனவே யாருக்கும் அஞ்சாது என்றால் பாடுபட முடியும்

தங்கள் அன்பையும் ஆதரவையும் எனக்கே தந்து மேலே போடப்பட்டுள்ள **புஷ்ப சின்னம்** இட்ட பெட்டியில் தங்களின் வோட்டுகளை அளித்து என்னைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள்.

S. நரசிம்மன் M. A. S. R. E.

திருச்செங்கோடு கைத்தறி நெசவாளர்

கூட்டுறவு உற்பத்தி, விற்பனைச் சங்கம் லிமிடெட்,

S. No. 523.

(சங்ககிரி R. S.) **திருச்செங்கோடு** (சேலம் ஜில்லா.)

எங்களிடம் 2000 தறிகளிலிருந்து நவீன டிசைன்களில் தயாராகும் அடியிற்கண்ட ரகங்கள் சரசமான விலைக்குக் கிடைக்கும்.

கோட்டிங், ஷர்ட்டிங் பீசுகள், சலவை, காடா பீசுகள், பெட்ஷீட், சால்வைகள், துண்டு, வேஷ்டித்தான்கள், வெள்ளை, கலர் சேலைகள்.

தேவையுள்ளோர் விபரங்களுக்கு எழுதவும்.

K. A. காசிவிஸ்வநாத முதலியார், *தலைவர்.*

TEL: "EMMANDSEE"

கைத்தறி துணியில் புதுமை!

நவீன டிசைன் சீட்டுகள்

கைத்தறி
&
செயற்கைப்
பட்டுஜவுளிகளை
வியாபாரிகளுக்கும்
கூட்டுறவு சங்கங்களுக்
கும் குறைந்த கூலியில்
உயர்ந்த முறையில்
(சீட்டி) மில் பிரிண்ட்
செய்து, எக்ஸ்ட்ரா
பாலிஷ் செய்து அனுப்புகிறோம்

M&C
FABRICS

விபரங்களுக்கு

M & C. பிரிண்டிங் மில்ஸ்

தபால்பெட்டி நெ.௭, ஈரோடு S.I.

fineart CBE

POST BOX No. 12.

ஸ்ரீ முருகன் & கோ.,

சாயத் தொழிற்சாலை,

பத்மாவதிபுரம், :: திருப்பூர் R. S.

எங்கள் சாயத் தொழிற்சாலையில், இண்டாந்தரின், நெப்தால், சல்பர் இன்னும் எண்ணற்ற கண்ணைக் கவரும் நூதனமான பல கலர்களில் நூல் & பட்டுகளுக்கு உத்திரவாதமான கெட்டிச் சாயங்கள் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டு போட்டுத் தருகிறோம்

கோவை ஜில்லாவில் பல நெசவாளர் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு நீண்ட பல வருடங்களாகத் தொடர்ந்து நங்கள் கெட்டிச் சாயம் போட்டுக் கொடுத்துக் கொண்டு வருகிறோமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

எமது சாயச்சாலையை மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கத்தார் அங்கீகரித்துள்ளார்கள்

வி. பச்சமுத்து, உரிமையாளர்.

சினிமா விசிறிகளுக்கு பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

எமது மகத்தான பொங்கல் வெளியீடு!

அஸோஸியேடட் ப்ரொடக்ஷன்சாரின்

அம்மா (தமிழ்)

கோவை — கர்னுடிக், சேலம் — பேலஸ்.
ஈரோடு — ஸ்டார், கூனூர் — கணேஷ்,
பொள்ளாச்சி — செல்லம்

தினசரி 3 காட்சிகள்

முதல் இரண்டு வகுப்புகளுக்கு முன்கூட்டியே டிக்கட்டுகளை மேற்கண்ட எல்லா தியேட்டர்களிலும் ரிசர்வ் செய்யப்படும்.

சேலம், கோவை நீலகிரி ஜில்லாக்களின் பூரண வினியோக உரிமையாளர்கள்.

கரூர் ஜெய் ஹிந்த் பிச்சர்ஸ்,
கரூர் :: கோயமுத்தூர்.